# செவ்வாய்க் கிரகத்தின் தென் பகுதியில் பனிப் படலம்: மெரினர்-7 படங்களில் புதிய தகவல்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தனிப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66 00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 1[1]
இதழ்:176
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆடி 23 ஜ: அவ் 22 வியாழக்கிழமை [7-8-69]


## வெறிச்சோடிக் கிடந்த

# யாழ். பஸ் நிலையம் மீண்டும் சுறுசுறுப்படைந்தது

## பஸ் சேவைகள் வழமைபோல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியாழன்

**ஐந்து தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற வேலைநிறுத்தத்தின் பின்னர் காரைநகர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் டிப்போக்களைச் சேர்ந்த . போ. ச. சாரதிகளும், கண்டக்டர்களும், மெக்கானிக்கர்களும் நேற்றுக்காலை மீண்டும் வேலைக்குத் திரும்பினர்**

நேற்றுக் காலையிலிருந்து வடபகுதியின் சகல பகுதிகளிலும் வழமையான பஸ் சேவைநடைபெற்றது. சகல டிப்போக்களிலும் காவல் புரிந்த ஆயுதம்தாங்கிய பொலிசார் நேற்றுக்காலை திருப்பி அழைக்கப்பட்டனர்.

வேலைநிறுத்தத்திலிருந்த சகல தொழிற்சங்கங்களையும் சேர்ந்த சுமார் 1300 தொழிலாளர்களும் நேற்று மீண்டும் வேலைக்குத்திரும்பியதாக ஊழியர் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

... சோடிக்கிடந்த யாழ்ப்பாணம் பஸ் நிலையம் நேற்று மக்கள் திரண்டுநின்று சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

நேற்றுமுன்தினம் மாலை இ. போ. ச. அதிகாரிகளிலும் தொழிலாளர் தலைவர் ...

திருத்தங்களை விரும்பும் பஸ் சாரதிகள், இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பதிவுப்புத்தகத்தில் பதியவேண்டும். இவைகள் இம்மாதம் 20-ம் திகதிக்குமுன் டிப்போ கவுன்ஸிலில் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாணத்தில்

## கண் அமுக்கத்தடை சங்கம் அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் கண் அமுக்கத்தடைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கண் வைத்திய கலாநிதி திரு. எஸ் ஆனந்தராஜன் கண் அமுக்க நோயின் கெடுதிகள் பற்றி படங்கள் மூலம் எடுத்து விளக்கி, கண் அமுக்க நோய் கண்டவர்கள் பார்வையை இழந்து விடாமல் பாதுகாக்க உடன் சிகிச்சை பெறவேண்டியதன் அவசியம் பற்றியும் விளக்கினர். சங்க நிர்வாகிகளாகப் பின் ...

... பட்டனர்.

தலைவர்: புனிதம் திருச்செல்வம்; உபதலைவர்கள்: திருவாளர்கள் ஜே. எம் சபாரத்தினம் (மேலதிக அரசாங்க அதிபர்) என். சிவசிதம்பரம் (சமூகசேவை உதவி அதிபர்); செயலாளர்-கே. என். நவரத்தினம் (கி. மு. உத்தியோகத்தர்) தனாதிகாரி-திருமதி எஸ். கந்தவனம். 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

கொக்குவில் மத்திய மாதர் சங்கத் தலைவி திருமதி எஸ். கந்தவனம் இச்சங்கத்திற்கு ஒரு மத்திய நிலயம் நிறுவித்தருவதாக உறுதியளித்தார்.

ஹூஸ்டன். ஆகஸ்ட் 6

செவ்வாய்க் கிரகத்தின் தென் துருவத்தில் பனிப் படலமும், பனிக்கட்டிகளும் இருக்கின்றனவாம். மெரினர்-7 கடைசியாக அனுப்பிய படங்களின் மூலம் இந்தத் தகவல் கிடைத்துள்ளதாம்.

ஏற்கனவே கிடைத்த படங்களின்படி சந்திரனில் உயிர்கள் வாழவே முடியாது என்று கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது உயிர்கள் வாழக் கூடிய சாத்தியம் இருக்கக் கூடும் என்ற கருத்து மீண்டும் உருவாகியிருக்கின்றது.

மெரினர்-7 சுமார் 2 ஆயிரம் கிலோ மிட்டர் தொலைவிலிருந்து இந்தப் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பியிருக்கின்றது. இந்தப் படங்களை இப்பொழுது விஞ்ஞானிகள் விரிவாக ஆராயத் தொடங்கியிருக்கிறார்கள்.

செவ்வாய்க் கிரகத்தில் மிகப்பெரிய பாலைவனப் பிரதேசம் என்று கருதப்பட்ட பகுதியையும் மெரினர்-7 தெளிவான படம் பிடித்து அனுப்பியிருக்கின்றது. மேலும் பல தெளிவான படங்களை மெரினர்-7 அனுப்பும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

செவ்வாய்க் கிரகத்தில் ஒரு பகுதியில் பனிப்படலமிருப்பதால் அங்கு ஏதோவொரு சுவாத்தியம் இருக்கலாம் என்றும் இதன் காரணமாக அங்கு எங்காவது உயிர்கள் வாழலாம் என்று விஞ்ஞானிகள் கருதத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தக் கருத்து இன்னும் சில தினங்களில் மேலும் தெளிவாகலாம்.

மணமாலை சூடியபடி

## என்மகனை எதிர்பார்த்தேன் மரணச் செய்தி கிடைத்தது'

மட்டுவில், புதன்

மணமாலைசூடி மருமகளுடன் என் மகன் வருவான் என்று எர்பார்த்திருந்தேன். ஆனால் புதுத் தம்பதிகளாக என் மகனும் மருமகளும் வீட்டிற்கு வரவில்லை. என் மகன் இறந்த துக்கசெய்தி மட்டுமே என்னிடம் வந்து சேர்ந்தது.

இவ்வாறு 65 வயது மூதாட்டி ஒருவர் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் அழுதழுது கூறினார்.

பரந்தன் 3-ம் வாய்க்காலைச் சேர்ந்த மருதன், வி. சுப்பன் ஆகிய இருவரும், மன்னாரைச் சேர்ந்த வீரகத்தி தருமன் என்ற வாலிபரை கொலை செய்ததாக கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு இவ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இறந்தவரின் தாயாரான வீரகத்தி கைம்பெண் செபமாலை இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தில் ஜூன் மாதம் 3-ம் திகதி இறந்தவரான எனது மகன் தருமனுக்குத் திருமணம் செய்யச் செலவுபணமாக நான் ரூபா 80 சேலை சட்டை, பாவாடைத்துணி எல்லாம் கொடுத்து 5-ம் திகதி காலை 9 மணி பஸ்ஸில் அனுப்பிவைத்தேன் ஆனால் 7-ம் திகதி அவர் இறந்துவிட்டதாக எனக்குத்தகவல் கிடைத்தது என்றார்

விசாரணையை மாஜிஸ்திரேட் இம்மாதம் 28-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## டாக்டர்கள் புகார இன்று விசாரணை

யாழ்ப்பாணம், வியாழன்

சுகாதார இலாகா பதில் டைரக்டர் டாக்டர் ஜெயசூரியாவும், உதவி டைரக்டர் திரு வீரசிறியும் இன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வார்கள்

இங்குள்ள பல இடங்களையும்இவர்கள்சுற்றிப்பார்வையிடுவதோடு, ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையும் நடாத்துவார்கள்.

காதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவின் உத்தரவின்பேரில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள மூன்று டாக்டர்கள் மீதான புகார்கள் பற்றி இரகஸிய விசாரணையையும் இவர்கள் மேற்கொள்வார்கள்'

(கா நி)

## அமெரிக்காவில் காலமானர்

கோட்டை, வியா

அமெரிக்காவிலுள்ளஇலங்கைத் தூதரகத்தைத் சேர்ந்த திரு எம் டபிள்யு அத்துக்கொறளை இன்று காலமானர். 53வது வயதுடைய இவர் ...

## குன்றக்குடி அடிகளார் மேல்சட்டசபைக்கு நியமனம்

சென்னை, அக். 6

தமிழ்நாடு மேல் சட்ட சபைக்கு தவத்திரு குன்றக்குடியடிகளார் நியமிக்கப்டுள்ளார். திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் இடத்துக்கு இவர் நியமனம் பெற்றுள்ளார்.

ஒட்டுப்பலகை

## யாழ்ப்பாணத்தில் முதலாவது விற்பனவு நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஒட்டுப்பலகை கூட்டுஸ்தாபனத்தின் முதலாவது வெளியூர் விற்பனவு நிலையம் யாழ்ப்பாணத்தில் அமைய விருக்கிறது.

இந்த நிலையம் இம்மாதம் 20-ம்திகதி திறக்கப்படவிருக்கிறது. இதன் ஒட்டிப்பலகைகூட்டிஸ்தாபனத்தில அதிககாலமாக கடமையாற்றிவரும் ஊழியர் ஒருவர் திறந்து வைப்பார்.

எரிகாயங்களுடன்அனுமதிக்கப்பட்ட

## வங்கி மனேஜரின் மனைவி ஆஸ்பத்திரியில் மரணம்

படங்கள் மூலம் எடுத்து விளக்கி, கண் அமுக்க நோய் கண்டவர்கள் பார்வையை இழந்து விடாமல் பாதுகாக்க உடன் சிகிச்சை பெறவேண்டியதன் அவசியம் பற்றியும் விளக்கினுர். சங்க நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டும் தெரிவு செய்யப்பட்டது.

கொக்குவில் மத்திய மாதர் சங்கத் தலைவி திருமதி எஸ். கந்தவனம் இச் சங்கத்திற்கு ஒரு மத்திய நிலையம் நிறுவித்தருவதாக உறுதியளித்தார்.

வேலைநிறுத்தத்திலிருந்த சகல தொழிற்சங்கங்களையும் சேர்ந்த சுமார் 1300 தொழிலாளர்களும் நேற்று மீண்டும் வேலைக்குத்திரும்பியதாக ஊழியர் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சாரதிகள் பஸ்களை ஓடத் தொடங்குவதற்கு முன் வெடிகளைக் கொளுத்தி ஆரவாரித்தனர். பருத்தித்துறை டிப்போவுக்கு முன்னுலுள்ள பிள்ளையார் கோவிலில் ஊழியர்கள் பலரும் நேற்றுக்காலை கரகம் காவடி ஆகியன ஆடி மகிழ்ந்தார்கள்.

ஐந்துதினங்களாக வெறிச்சோடிக்கிடந்த யாழ்ப்பாணம் பஸ் நிலையம் நேற்று மக்கள் திரண்டுநின்ற [illegible] சுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது.

நேற்றுமுன்தினம் மாலை இ. போ. ச. அதிகாரிகளாலும் தொழிலாளர் தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 7 அம்ச ஒப்பந்த விபரப் பின்வருமாறு:-

0 வேலைக்குத் திரும்பும் இ. போ. ச. ஊழியர்களின் நலன் கருதி பருத்தித்துறை பகுதி நேர அட்டவணையை இ போ ச அதிகாரிகள் மாற்றியமைப்பார்கள்.

0 பகுதி நேர அட்டவணை சம்பந்தமான மாற்றங்கள், திருத்தங்கள் விரும்பும் பஸ் சாரதிகள், இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பதிவுப்புத்தகத்தில் பதியவேண்டும். இவைகள் இம்மாதம் 20-ம் திகதிக்குமுன் டிப்போ கவுன்ஸிலில் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

0 இதில் தீர்த்துக்கொள்ளப்படாத பிரச்னைகள் யாவும் ஆகஸ்ட் மாதஇறுதியில் நேர அட்டவணை அதிபர் முன்னிலையில் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

0 யாழ். டிப்போவைச் சேர்ந்த கண்டக்டரான என். நாகராஜா, பருத்தித்துறை டிப்போவைச்சேர்ந்த சாரதியான எஸ் குமாரசாமிப்பிள்ளை, கே எஸ் ஆறுமுகம், கண்டக்டரான கே நல்லதம்பி ஆகியோரது இடமாற்றம் ரத்தாகும்

0 யாழ். டிப்போ ஊழியர்களின் 19 அம்சக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும்

0 பதவி உயர்வு வழங்க வேண்டியவர்கள் விடயத்திலும் விரைவில் கூடிய கவனம் செலுத்தப்படும். அத்துடன் காரைநகர் உபடிப்போவின் கோரிக்கையும் கவனிக்கப்படும்

0 வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்ததென்ற காரணத்தால் எந்த ஊழியர் மீதும் பழிவாங்கப்பட மாட்டாது. (கா நி)

வடபகுதி அசைஸ் விசாரணை

# பருத்தித்துறை கொலைமுயற்சி வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வியா.

பருத்தித்துறை கொலை முயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ் வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ எல். டி கிறைஸ்டர் முன்னிலையில் நேற்று காலை விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் 68ம் ஆண்டு ஏப்ரல் 5ம் தேதி விஸ்வலிங்கம் கமலநாதனை முருகுப்பிள்ளை ஐயமுதது ஏரம்பமூர்த்தி முருகுப்பிள்ளை ஆகியோர் கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ். நாகராசா, புறக்டர் ஏ. அன்ரனி அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் என். சிவராஜசிகம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் பிரியாந்த பெரேரா ஆஜரானுர்,

விஸ்வலிங்கம் கமலநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரிகள் இருவரும் அயலவர்கள். அவர்கள் என் சொந்தக்காரர் காணி எல்லை வேலி சம்பந்தமாக சச்சரவு இருந்தது. சிலகுதியால் எங்கள் காணிக்குள் நடப்பட்டிருந்தது. எதிரிகள் அப்படி நட்டார்கள் என்று எனக்குத் தெரியவந்தது நான் கதியாலைப்பிடுங்கி வேலியில் சாத்தினேன் எதிரிகள் இருவரும் அப்போது இருந்தனர். 2-ம் எதிரியின் மற்ருெரு மகனும் இருந்தார். 2-ம் எதிரியின் மனைவியும் இருந்தார். ஏன் கதியால் பிடுங்கியதாக 2-ம் எதிரி கேட்டார். நடுவதானுல் சரியான எல்லையில் கதியாலை நடும்படி நான் கூறினேன். 2-ம் எதிரி என்னைப் பேசினுர். துவக்கை எடுத்துவந்து சுடுவேன் என்று கூறினுர். என்னை சுடுவதானுல் ரோட்

(4-ம் பக்கம் பார்க்க

# வேலை நிறுத்தத்துக்கான அடிப்படைக் காரணம்

## ஆலாலசுந்தரம் விளக்கம்

யாழ்ப்பாணம், வியா.

இ. போ. ச. தொழிலாளர்களின் 19 கோரிக்கைகளில் 16 கோரிக்கைகளை தேசிய சேவை அமைச்சர் வழங்கச் சம்மதமளித்திருந்தார். ஆனுல் இவைகள் வழங்கப்படாததாலேயே இலங்கை பஸ் தொழிலாளர் கழகம் வேலை நிறுத்தத்தில் குதித்தது.

தமிழரசுக் கட்சி ஆதிக்கத்தில் இயங்கும் இலங்கை பஸ் தொழிலாளர் கழக செயலாளர் திரு. எம். ஆலாலசுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தத்திற்கு அடிப்படைக் காரணம் 19 அம்சக் கோரிக்கைதான் என்ருல், ஊழியர் நால்வரது இடமாற்றம் இதற்கு உடனடிக் காரணமாகவிருந்ததாக இவர் மேலும் சொன்னுர்.

சமரச முதல் பேச்சுவார்த்தையில் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. வெளியேறியதாக சொல்லப்படுவது உண்மையல்லவென்றும், இது நேற்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் தெரிவிக்கப்பட்டபோது அங்கிருந்த அதிகாரிகள் இதனை ஏற்றுக் கொண்டதாகவும் இவர் மேலும் தெரிவித்தார். (கா. நி)

# காலமானர்

கோட்டை, வியா

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகத்தைத் சேர்ந்த திரு எம் டபிள்யு அத்துக்கொறளை இன்று காலமானுர். 53வது வயதுடைய இவர் இலங்கையின் சிறந்த ராஜதந்திரிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது,

திருநெல்வேலி

# எறிகுண்டு வீச்சில் ஒருவர் கைதானுர்

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலியிலுள்ள ஒரு வீட்டுக்கு நேற்று முன்தினம் எறிகுண்டு வீசப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எறிடுண்டு வீச்சினுல் பரமேஸ்வராக் கல்லூரிச் சந்தியிலுள்ள ஒரு வீட்டின் முன்பகுதி சேதமடைந்தது சந்தேக நபரின் வீட்டிலிருந்து சில எறிகுண்டுகளையும் பொலிசார் மீட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (கா நி)

# ஜாதிக சம்பத முடிவுகள்

கொழும்பு, வியா.

சென்ற 4-ம் திகதி இழுக்கப்பட்ட ஜாதிக சம்பத சீட்டிழுப்பு முடிவுகள் சில ஈழநாடு' வாரமலரில் தவருக வந்துள்ளன. இங்கு சரியான முடிவுகள் தரப்படுகின்றன.

| தவருனது | சரியானது |
|---|---|
| 03 B 0920 | 03 B 1920 |
| 09 E 1842 | 09 E 1892 |
| 16 H 0394 | 06 H 0394 |
| 12 J 0942 | 12 J 1942 |
| 11 L 0575 | 12 K 0575 |
| 23 P 1263 | 23 P 1363 |
| 20 R 1407 | 20 R 0407 |
| 20 T 1303 | 15 T 1303 |
| 11 V 1757 | 11 V 0757 |
| 01 V 1712 | 01 V 0712 |
| 11 U 1757 | 11 U 0757 |
| 21 W 1149 | 21 W 1349 |
| 13 W 1847 | 13 W 0847 |
| 17 X 0649 | 07 X 0649 |
| 19 X 1450 | 19 X 0450 |
| 08 Y 0660 | 08 Y 0860 |

19 G 0997

(இந்த இலக்கம் வரவில்லை)

கீழ் வரும் இரண்டும் பரிசு பெறவில்லை:

02 Q 0637    19 Q 0999

எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்ட

# வங்கி மனேஜரின் மனைவி ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம்வியா.

எரிகாயங்களுடன் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வவனியாவிலுள்ள வங்கி மனேஜரின் மனைவியான திருமதி சண்முகநாதன் நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில்மரணமானுர்.

கடந்த மாதம் 31-ம்திகதி இவர் அனுரதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது பொலிசார் நடத்திய விசாரணையில் இவரது கணவன்மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இறந்த பெண்ணின் கணவரான வங்கி மனேஜரை பொலிசார் தேடி வருகின்றனர்.

அனுரதபுரம் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை நடைபெற்றது வவனியா பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கா. நி)

# இந்திய ஹரிஜனர்களுக்கு இங்கிலாந்தில் ஆலயம்

லண்டன், ஆகஸ்ட் 6

இந்திய ஹரிஜன மக்கள் வழிபாடு செய்துகொள்வதற்காகச் சமீபத்தில் இங்கிலாந்தில் ஒரு ஆலயம் திறக்கப்பட்டுள்ளது. மத்திய இங்கிலாந்தைச் சேர்ந்த வொல்வர்ஹாம்டன் பட்டினத்திலுள்ள இக்கோவிலை உதவி இந்திய ஹைகமிஷனர் திரு. டி. எஸ். பாவா திறந்துவைத்தார். இத்திறப்பு விழாவின்போது பிரிட்டனிலுள்ள 500-க்கும் அதிகமான இந்தியப்பிரஜைகள் கலந்துகொண்டனர்.

வொல்வர்ஹாம்டன் பட்டினத்தில் வசிக்கும் இந்திய மக்கள் இந்தக் கோவிலை அமைத்துள்ளார்கள். இந்தியாவில் 13-ம் நூற்ருண்டில் சாதி ஒழிப்பிற்காகப்போராடிய ரவிதாஸ் எனப்படும் மகானின் போதனைகளைப் பின்பற்றுபுவர்கள் இந்தக் கோவிலைப் பரிபாலித்துவருவார்கள்.

இங்கிலாந்திலுள்ள ஹரிஜன மத ஸ்தாபனத்தின் காரியதரிசியான திரு. சுவர்ண்சாந் இவ்வாலயத் திறப்பு விழா வைபவத்தில் உரைநிகழ்த்துகையில்சாதிப் பாகுபாட்டை வன்மையாகக் கண்டித்ததுடன் சகல மக்களும் சமத்துவத்துடன், சம உரிமைகளுடன் வாழ வழிதேடவேண்டுமென எடுத்துரைத்தார்.

'தமிழை முற்ருகப்புறக்கணிப்பதில்

# கைத்தொழில் அமைச்சு இலாகாக்களே முதலிடம் வகித்து வருகின்றன'

## கிளிநொச்சி எம். பி. பிரதமர் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், வியாழன்.

தமிழைப் புறக்கணிப்பதில் கைத்தொழில், கடற்ரெழில்' அமைச்சும், திணைக்களங்களும் கூட்டுத் தாபனங்களுமே முன்னணியில் நிற்கின்றன என்று கிளிநொச்சி எம். பி. திரு. கா.பொ. இரத்தினம் பிரதம மந்திரியினதும் திறைசேரிக் காரியதரிசியினதும் கைத்தொழிலமைச்சின் நிரந்தரக் காரியதரிசியினதும் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்

1966ம் ஆண்டு தமிழ் மொழி விசேஷ பிரமாணங்களையும், 760-ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையையும் மேற்குறிப்பிட்ட மூன்று இலாக்காக்களும் மீறுவதாக பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக திரு. கா பொ. இரத்தினம் எம்; பி. மேற்குறிப்பிட்ட மூவருக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளதாவது:

கைத்தொழிலில் முதலீட்டு வாய்ப்புக்கள் என்னும் குறிப்பும், 18-7-68 னது விசேஷ கஸட்டும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டும் தமிழில் வெளியிடப்படாதது மிகப் பாரதூரமான குற்றமாகும். இது அரசாங்க சுற்றறிக்கைகளை மீறும் ஒரு செயலாகும். அரசாங்க பொறியியல் கூட்டுஸ்தாபனம் தமிழ் மக்களுக்கு அனுப்பும் விண்ணப்பப் படிவங்களை தனிச் சிங்களத்திலேயே அனுப்புவதும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

760-ம் இலக்க சுற்றறிக்கையை ஏறக்குறைய எல்லா அரசாங்க நிறுவனங்களுமே புறக்கணிப்பதால் சுற்றறிக்கை கேலிக்கூத்தாக ஆக்கப்பட்டு விட்டது என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசாங்க ஊழியர்கள் சிலரின் தீவிர வகுப்புவாதம் தான் தமிழ் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம் என்று தாங்கள் பொய்ச் சமாதானம் செய்வது பொருத்தமற்றது என்பதை அமைச்சுக்களின் தமிழ் புறக்கணிப்பு நன்கு புலப்படுத்துகின்றது என்று பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் திரு. இரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார். (கா. நி)

# "1-ம் எதிரி துப்பாக்கி வைத்திருந்ததைக்கண்டேன்"

## கொலை முயற்சி வழக்கில் பெண் சாட்சியம்

வல்வெட்டித்துறை, புதன்

"நான் ஒழுங்கையால் சென்று கொண்டிருக்கும் போது துப்பாக்கி வெடிச் சத்தம் ஒன்று கேட்டதும் விரைவாக ரோட்டிற்குவந்து சேர்ந்தேன். அப்போது முதலாம் எதிரி துப்பாக்கியும், 2-ம் எதிரி கத்தியும், 3-ம் எதிரி மின்னல் போன்று பளிச்சிடும் ஒரு பொருளும் வைத்திருந்தனர்." என உடுப்பிட்டியைச் சேர்ந்த இளையதம்பி மனைவி மாணிக்கம் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் உடுப்பிட்டியைச்சேர்ந்த வ. கதிரவேலு, கு. சின்னத்துரை, கு பஞ்சலிங்கம், த. பாலச்சந்திரன், செ. மகேந்திரராசா ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த கே. ஜெயரத்தினம் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாகப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மாணிக்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"சம்பவதினம் மாலைநான் கடைக்கு ஒழுங்கையால் வந்துகொண்டிருந்தேன், ரோட்டில் வந்து சேர்ந்ததும் எதிரிகளைக் கண்டேன் என்னைக்கண்டதும் ஓட்டம் பிடித்தார்கள். துப்பாக்கிச் சத்தம் கேட்ட பக்கத்துக்குப் போனபோது காயப்பட்டவரைக் கண்டேன். அவரது உடம்பிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. பிறகு அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டார். பொலிசாருக்கும் வாக்குமூலம் கொடுத்தேன்."

செ. நவரத்தினம், பொலிஸ் உத்தியோகஸ்தர் பெரேரா ஆகியோர் சாட்சியமளித்தபின் மேல்விசாரணை இம்மாதம் 18-ந் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது

முல்லைத்தீவில்

# இரண்டு சிங்கள பாடசாலை முதலாம் திகதி திறக்கப்படும்

கொழும்பு, புதன்

முல்லைத்தீவில் அடுத்த மாதம் 1-ம் திகதி இரண்டு சிங்களப் பாடசாலைகள் திறக்கப்படவிருக்கின்றன. அதனுடன் யாழ். மாவட்டத்தில் புத்தூரில் ஒரு தமிழ் பெளத்த பாடசாலையும், புன்னுலையில் ஒரு சிங்கள பெளத்த பாடசாலையும் விரைவில் திறக்கப்படும்.

இதற்கான முழு ஒழுங்குகளையும் கல்வி அமைச்சு துரிதமாக மேற்கொண்டுள்ளது.

மேலும் பல பெளத்த பாடசாலைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் திறக்கப்படுமென கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப் பகுதி பெளத்த மாணவர்கள் கல்வி நனன் கருதியே இவைகள் ஆரம்பிக்கப்படுகின்றனவாம்.

# நாமக்கல் கவிஞருக்கு அரசு கௌரவம்

சென்னை, ஆக. 6

தமிழகத்தின் முன்னைநாள் அஸ்தான கவிஞர் திரு நாமக்கல் இராமலிங்கம்பிள்ளைக்கு 200 ரூபா சன்மானமாக வழங்க தமிழக அரசாங்கம் தீர்மானித்துள்ளது இந்த மாதத்திலிருந்து திரு. இராமலிங்கம்பிள்ளைக்கு இது வழங்கப்கடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பீச் ரோட்டில் பெரிய வீட்டோடு கூடிய அரை ஏக்கர் நிலப்பரப்பு உடனடியாக விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். மாதர், 466, பீச்ரோட், பாசையூர், யாழ்ப்பாணம். 1297

புடவைக்கடைக்குரிய தளபாடங்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். சிவசக்தி ரெக்ஸ்ரையில்ஸ், மெயின் வீதி, சுன்னுகம். 1295

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 7—8—69

(காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00 செய்தி அறிக்கை)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம் 12-03 திரைகானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 புல்லாங்குழலிசை, 7-35 பேச்சு, 7-45 ஐக்கிய நாடுகள் சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

......

## கிராமசபைக்குச் சொந்தமாகும்

அல்லைப்பிட்டி, வியாழன் வேலணை கிராமசபை, அலுவலகம், கடைகள், சந்தை ஆகியன் இருக்கும் காணி வெகுவிரைவில்மேற்படிகிராசபைக்குச் சொந்தமாக்கப்படவிருக்கிறது. இந்தகவலை

பண்டத்தரிப்பு கிராமசபை

## கேள்வி அறிவித்தல்

### மாரீசன்கூடல் நரிஓடைவாய்க்கால் திருத்தம்

மேற்படி ரோட்டுக்கான கேள்விப்பத்திரங்கள் 1969-ம் ஆண்டு ஆவணி மாசம் 16-ந் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரைக்கும் என்னால் சீல் வைத்த ரெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 5/-ம், கேள்விக்கட்டுப்பணம் ரூபா 50/-ம் கட்டியதன் பின்னரே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 15 8-69-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிவரையும் இச்சபையில் வழங்கப்படும். இதற்காய ஏனைய விபரங்களை மேற்படி சபையில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளவும்.

குறிப்பு:- கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டா.

சி. சி. கனகசபாபதி
அக்கிராசனர்,
கிராமசபை

பண்டத்தரிப்பு.
4-8-1969 1691

## நம்பிக்கைக்கு பாராட்டு

சுழிபுரம், வியா.

'மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகத்தில் அங்கத்தவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை எவ்வளவு என்பதை நேர்முகமாக இன்றய கூட்டத்துக்கு சமூகம் கொடுத்ததன் மூலம் அறிந்து கொண்டேன். சங்க விதிகளையும், கணக்கு விபரங்களையும் அங்கத்தவர்கள் துருவித் துருவி ஆராய்ந்து உண்மை விபரத்தை அறிய முயன்றதை மிகவும் பாராட்டுகின்றேன். இவ்விதம் அங்கத்தவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதனுல் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மேலும் வளர்ச்சியடையும் என்பது திண்ணம்'

இவ்வாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. என். கனகசபை குறிப்பிட்டார்.

## புதிய கட்டடம்

அல்லைப்பிட்டி, வியாழன் வருடாவருடம் ஏற்படும் மாணவர்களின் இடநெருக்கடிகளைத்தீர்ப்பதற்காக தீவு

# வலி. கிழக்கு விளையாட்டு கழக போட்டி முடிவுகள்

புத்தூர், வியா.

வலிகாமம் கிழக்கு விளையாட்டுக்கழகங்களின் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது. வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. வ கந்தப்பிள்ளை தலைமை வகித்தார். கோப்பாய் எம். பி. திரு. சு. கதிரவேலுப்பிள்ளை போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். வடபகுதி அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டார்.

போட்டியில் பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

### தத்திமிதித்துப் பாய்தல்

இ. இராசதுரைஞானபாஸ்கரன் கழகம்; கல்வியங்காடு, வே இளையகுட்டி வீனஸ் கழகம்; புத்தூர், பி. மயில்வாகனம் யுப்பிற்றர் கழகம்; ஆவரங்கால்.

### நீளம் பாய்தல்

சி. அருந்தவம் வீனஸ்; புத்தூர், இ. இராசதுரை ஞானபாஸ்கரன்; கல்வியங்காடு, எம். சிவநாதன் யுப்பிற்றர்; ஆவரங்கால்.

### 800 மீற்றர் ஓட்டம்

ஆ. விநாயகமூர்த்தி ஸ்ரீ விக்கினேஸ்வரா; புத்தூர், கே. நவரத்தினம் ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, எஸ். தங்கராஜா ஸ்ரீவிநாயகா; நீர்வேலி,

### உயரம் பாய்தல்

ஆ. சுப்பிரமணியம் ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, பி. யோகச்சந்திரன் ஸ்ரீவிக்னேஸ்வரர்; அச்சுவேலி, செ. பூபாலசிங்கம் நாவலர்; பத்தமேனி.

### 100 மீற்றர் ஓட்டம்

சி. தெய்வேந்திரம் ஸ்ரீகுமரன்; புத்தூர், வே. இளையகுட்டி வீனஸ்; புத்தூர், க. செல்வராசா சரஸ்வதி; ஆவரங்கால்.

### 200 மீற்றர் ஓட்டம்

வே. இளையகுட்டி வீனஸ்; புக்தூர், சி. தெய்வேந்திரம் ஸ்ரீ குமரகுருபரன்; புத்தூர் கிழக்கு, சு. தர்மகுலராசா ஞானபாஸ்கரன்; கல்வியங்காடு.

### 400 மீற்றர் ஓட்டம்

கே. வி. கந்தசாமி ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, சு. தர்மகுலராசா ஞானபாஸ்கரன்; கல்வியங்காடு, மா. கந்தசாமி ஸ்ரீகுமரகுருபரன்; புத்தூர் கிழக்கு.

### 1500 மீற்றர் ஓட்டம்

ஆ. விநாயகமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரா; அச்சுவேலி, வி. சிவபாலன் ஸ்ரீவிக்கினேஸ்வரா; அச்சுவேலி, எஸ். தங்கராசா ஸ்ரீவிநாயகா; நீர்வேலி.

### குண்டெறிதல்

கு. உருத்திரகுமார் ஞானபாஸ்கரன்; கல்வியங்காடு, நா. தங்கராசா ஸ்ரீவிக்கினேஸ்வரா; அச்சுவேலி, செ. இரத்தினராசா ஸ்ரீவிக்கினேஸ்வரா; வாதரவத்தை.

### கயிறிழுத்தல்

ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, சரஸ்வதி; ஆவரங்கால்.

### 4x100 மீற்றர் ஓட்டம்

வீனஸ்; புத்தூர், ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, ஞானபாஸ்கரன்; கல்வியங்காடு.

## புதிய உறுப்பினர்

வேலணை, வியாழன்

வேலணை கலாமன்றத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் வங்களாவடி வைரவர் ஆலய முன்றலில் திரு த வடிவேலு தலைமையில்நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. கா. பொன்னம்பலம், உபதலைவர்: திரு. செ. காசிலிங்கம், காரியதரிசி: திரு. இ. சற்குருநாதன், தனதிகாரி: திரு. க. துரைராசா. 6 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

★

அல்லைப்பிட்டி, வியாழன் அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் சங்க வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. எஸ் எஸ். இன்னுசித்தம்பி, உபதலைவர்கள்; திரு. எஸ். வி. சீனிவாசகம், திரு. ஜோன் மார்க்கு, திரு. டி. பூபாலசிங்கம், திரு. வி. குமாரசாமி, இணைச்செயலாளர்கள்: திரு. எம். எஸ். சுந்தரம், திரு. எம். கே. அருளானந்தம், துணைச்செயலாளர்: திரு. கே. கந்தசாமி, பொருளாளர்: திரு. ஏ. வீ. இராஜரெத்தினம், துணைப்பொருளாளர்: கே கனகரத்தினம்

★

அல்லைப்பிட்டி, வியாழன் வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் மூன்று

# "நல்ல மாணக்கர்களை உருவாக்கவேண்டும்"

சித்தன்கேணி, வியாழன்

''நாட்டுக்குச் சேவையாற்றக்கூடிய நல்ல மாணவர்களை உருவாக்குவதே நல்லாசிரியர் கடமையாகும். இவ்வழியில் தலைமையாசிரியர் கந்தசாமி அவர்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது''

அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. கா. கந்தசாமிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய ஆசிரியர் திரு. வி. முருகேசு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மற்ற ஆசிரியர்கள் ஓய்வுபெறும் தலைமை ஆசிரியரின் சேவையை பின்பற்றக்கூடிய விதத்தில் அமைந்துள்ளதென்று கூறினார்.

திரு. கு. பாலசிங்கநாயகம் பேசுகையில் ''கல்வித் திணைக்களம் கொண்டாடும் சியவச விழாவில் இளைப்பாறும் திரு. கந்தசாமிஅவர்கள் இலங்கை கல்வி வரலாற்றில் 40-வருட நற்சேவை செய்தவராயும் சியவச விழாவில் இளைப்பாறும் ஆசிரியராகவும் இடம் பெறுகிறார். நூற்றாண்டு விழாவில் இவரின் சேவைநலம் பாராட்டு விழாவும் இடம்பெறுவது இவரின் அயராத உழைப்பினுலும் கல்வி வளர்ச்சிக்குச் செய்த சேவையினுலுமே என்பது நடந்தறிந்த உண்மையாகும்.'' என்றார். உதவி ஆசிரியர்களும் மற்றும் பலரும் உரைநிகழ்த்தினர்.

## உற்சவம்

வல்வெட்டித்துறை, புதன் தொண்டமானுறு செல்வச் சந்நிதி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 13-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. 21-ந் திகதி பூங்காவனத் திருவிழாவும், 25ம் திகதி சப்பறத்திருவிழாவும், 26-ந் திகதி தேர்த்திருவிழாவும், 27-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 0 0

ஊர்காவற்றுறை, வியா. சரவணை சின்னமடு மாதா தேவாலய வருடாந்த உற்சவம் செவ்வாய்க்கிழமை திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடைந்தது.

0 0 0

அல்லைப்பிட்டி, புதன் கிளிநொச்சி உருத்திரபுரம் கதிர்காமம் ஏழுமலை மாணிக்கப்பிள்ளையார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் சென்ற செவ்வாய்க்கிழமை திருவோண நட்சத்திரத்தில் நடைபெற்ற தீர்த்த உற்சவத்துடன் முடிவுற்றது.

0 0 0

வல்வெட்டித்துறை, புதன் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 12-ந் திகதி ஆரம்பமாகி 27-ந் திகதி தேர், தீர்த்த விழாவுடன் முடிவடைகிறது.

## கொக்குவிலில்

## கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன் கல்வி நூற்றாண்டுவிழாவையொட்டி கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் ஒரு கல்விப் பொருட்காட்சி நடைபெற்றது. இக்காட்சியை நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எம். குணரத்தினம் திறந்துவைத்தார். திரு. த. குமாரசாமிப்புலவர் ஆசியுரை வழங்கினார். காட்சியினைப் புகழ்ந்து பேசிய வித்தியாதிகாரி, பாடசாலையின் தலைமையாசிரியரைப் பாராட்டினார்.

## ஈ. த. இ. இ.

...கார் கிளை

## சிரமதானம்

வேலணை, வியாழன் யாழ். திருநெல்வேலி சைவமுன்னேற்றக் கழகத்தினரால் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள பிள்ளையார் கோவில் காணியும், உள்கோவிலும் சிரமதானப் பணி மூலம் சுத்திகரிக்கப்பட்டன.

'ஈழநாடு'

# கடிதப் போட்டி—(4)

இப்போட்டியில் பரிசு பெறுபவர் செல்வி சௌமினி பஞ்சாட்சர சர்மா, கோப்பாய்வடக்கு, சோப்பாய்.

பரிசுக் கடிதம்

## மதுவெறியும் வீதிவிபத்துக்களும்

தினமும் காலையில் பேப்பரைப் பிரித்தால் வீதி விபத்துகளால் மரணம் என்னும் செய்திதான் கண்ணில் பட்டு மனதை பதற வைக்கிறது. அதிகமான விபத்துக்களில் ஓர் ஒற்றுமை. சாரதி மது மயக்கத்தில் இருந்தார் என்பதே அது. ஏன் அப்படி? இத்தனை உயிர்களும் நம்கையிலே என்ற பொறுப்புணர்ச்சி அவர்கட்கு ஏற்படுவதில்லையா? பொறுப்புணர்ச்சி என்றால் என்ன என்பதையே தெரியாமல் செய்துவிடும் மதுவரக்கன் உள்ளவரையில் விபத்துகட்கும் குறைவிருக்காது.

மேல்நாடுகளில் வீதி விபத்துகளைத் தடுக்கும்முகமாக கடுமையான சட்டங்கள் இயற்றப்படுகின்டாக்ஸி சாரதியாவதற்கு பல கடுமையான பரீட்சைகளைத் தாண்டியாகவேண்டும். நம்நாட்டிலும் பொலீஸ் பகுதியினர் சில கடுமையான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி வாகனவிபத்துகளைக் குறைக்கலாமா என சோதனை செய்து பார்க்கலாமே?

இ. போ. சாரதிகளை வேலைக்குத் தேர்ந்தெடுக்கும்போது அவர் தராதரங்களை ஆராயும் போது கூடவே மது அருந்தும் வழக்கம் உள்ளவரா இல்லையா என்பதை அறிந்து அவர்எவ்வளவு திறமை உள்ளவராக இருந்தாலும் அவரை எடுத்துக் கொள்ளக்கூடாது. தினமும் சேவைக்குச்செல்லும் போது ஒவ்வொருவரையும் மதுபோதையில் இருக்கிறரா என்பதை நிச்சயம் செய்துகொண்டுதான் அனுப்பவேண்டும்.

பிறவாகன சாரதிகளுக்கு 'லைசென்ஸ்' கொடுக்கும்போது அவர்களின் தராதரத்தை ஆராய்ந்து மதுஅருந்துபவராக இருந்தால் அவர்களுக்கு 'லைசன்ஸ்' வழங்கக்கூடாது. 'லைசன்ஸ்' வழங்கப்பட்டு அவர்கள் சாரதிகளாய் ஆகியபின் மதுஅருந்துபவர் என்று தெரிந்தால் 'லைசன்சை' தயங்காமல் பறிமுதல் செய்துவிடவேண்டும்.

இவற்றால் எல்லாம் என்ன பயன்? விபத்துக்கள் குறையப் போகிறதா என்று கேட்கலாம். ஆனால் இத்தகைய சில சட்டங்களாவது கடமை நேரத்தில் மதுவை மறந்திருப்போம், இல்லாவிட்டால் வேலைபோய்விடும் என்ற உணர்ச்சியை மது போதையில் வண்டியோட்டும் சில சாரதிகளின் மனதில் ஏற்படுத்தக் கூடுமல்லவா?

இப்பொழுது நீங்கள் நாகம் புதிய இரும்புத்தகரங்களைப் ...லாம்.....
குறைந்த செலவில் கூரையிடுவதற்கும் ...டுவதற்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அல்லைப்பிட்டி, வியாழன்

வேலணை கிராமசபை, அலுவலகம், கடைகள், சந்தை ஆகியன இருக்கும் காணி வெகுவிரைவில் மேற்படி கிராமசபைக்குச் சொந்தமாக்கப்படவிருக்கிறது. இந்தகவலை வேலணைக் கிராமசபைத்தலைவர் திரு. க. சாதசிவம் நமது நிருபரிடம் தெரிவித்தார். மேற்படி காணிகளைப்பெறுவதற்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன்த ான்கலந்து ஆலோசித்தாகவும். அவர் சம்மதம் தெரிவித்து விட்டதாகவும் திரு. சதாசிவம் மேலும் தெரிவித்தார்.

## புதிய கட்டடம்

அல்லைப்பிட்டி, வியாழன்

வருடாவருடம் ஏற்படும் மாணவர்களின் இடநெருக்கடிகளைத்தீர்ப்பதற்காக தீவு பகுதியிலுள்ள பிரபல கல்லூரியாகிய வேலணை மத்திய மகாவித்தியாலயத்துக்கு ஓர் புதிய பாடசாலைக் கட்டிடமொன்று கல்விப்பகுதியினரால் உருவாக்கப்பட்டு வருகின்றது. அடுத்த தவணை தொடக்கத்தில் இக்கட்டிட வேலைகள் பூர்த்தியாகி விடுமெத்தெரியவருகின்றது.

ரெத்தினம், துணைப்பொருளாளர்: கே கனகரத்தினம்

★

அல்லைப்பிட்டி, வியாழன்

வேலணை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் மூன்றாவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர். டாக்டர் கே. வீ. கே. ஜெயச்சந்திரா தலைவர்: கே. இராஜாஜி, துணைத்தலைவர்: எம். ஜீவா காரியதரிசி: கே. பாலச்சுந்தரம், தனாதிகாரி: கே. அம்பிகைபாகன் நிர்வாகசபை யொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

இவர் கொழும்பு நகரில் வழக்கறிஞராகத் தொழில் புரிய ஆரம்பித்திருக்கின்றார்.

ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, சரஸ்வதி; ஆவரங்கால்.

**4x100 மீற்றர் ஓட்டம்**

வீனஸ்; புத்தூர், ஸ்ரீவிநாயகா; நீர்வேலி, ஞானபாஸ்கரன்; கல்வியங்காடு.

**4x400 மீற்றர் ஓட்டம்**

சரஸ்வதி; ஆவரங்கால், விக்னேஸ்வரா; அச்சுவேலி, ஸ்ரீவிநாயகா; நீர்வேலி.

**விநோத உடை**

ஐக்கிய கழகம்: இடைக்காடு, சரஸ்வதி, ஆவரங்கால்; யுப்பிற்றர், ஆவரங்கால்.

**சறுக்குக் கம்பம் ஏறுதல்**

கே. சந்திரசேகரம், ஸ்ரீ விநாயகர், நீர்வேலி;

**சாம்பியன்**

ஸ்ரீ விக்கினேஸ்வரா, அச்சுவேலி.

**தனிப்பட்ட வீரர்**

வே. இளையகுட்டி, (வீனஸ் புத்தூர்).

**உதைபந்தாட்டம்**

வீனஸ் புத்தூர், ஸ்ரீசுப்பிரமணியம், நீர்வேலி.

**கரபந்தாட்டம்.**

ஸ்ரீ கணேசா, நீர்வேலி, வீனஸ், புத்தூர்.

## பாடசாலை 60-வது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

மயிலணிச் சைவவித்தியாசாலையின் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது இவ்வித்தியாசாலை ஆரம்பித்து மூன்றுண்டுகள் தலைமை யாசிரியராயிருந்து பணியாற்றிய உடுவில் பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயருக்கு பொற்கிளி வழங்கி, பட்டும் போர்த்துக் கௌரவித்தனர். தலைமையாசிரியர் திரு. மா. குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பாடசாலை ஸ்தாபகரின் உருவப்படம் திரைநீக்கஞ் செய்துவைக்கப்பட்டது. முன்னைநாள் ஆசிரியர் இருவருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. திரு. கு. அம்பலவாணர், பாடசாலையின் வரலாறும் வளர்ச்சி பற்றியும் வாசித்து அளித்தார். பல பெரியார்கள் வாழ்த்துரை வழங்கினர். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

வித்தியாதிகாரி, பாடசாலையின் தலைமையாசிரியரைப் பாராட்டினர்.

## ஈ. த. இ. இ. மூதூர் கிளை

மூதூர், புதன்

ஈழத் தமிழ் இளைஞர் இயக்க மூதூர்க்கிளைக்குப் புதிதாக நிர்வாகிகள் தெரியப்படுவரென்றும், அதன் பின்னரே இயக்கக் கிளை செயற்படுமென்றும் முன்னர் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகிகள் தெரிவும் நிறைவேற்றிய தீர்மானங்களும் செல்லுபடியாகாதென் றும் கிளை அமைப்புச் செயலாளர் திரு. ஒ. குலேந்திரன் தெரிவிக்கிறார்.

## மீண்டும் வேலை

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப் படை முகாமில் வைத்து வீரர் சந்தியாகுப்பிள்ளையை அடித்து காயம் விளைவித்ததாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு வைக்கப் பட்டிருந்த அதே முகாமைச் சேர்ந்த 9 வீரர்கள் இலங்கை விவசாயப் படையின் ஆணையாளரினல் மன்னிப் பளிக்கப்பட்டு மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இதில் முறையே கே. கைலாயபிள்ளை, ஏ. தங்கவேல், எஸ். நடராசபெருமாள் ஆகிய 3 வீரர்களுக்கும் திரும்பவும் விஸ்வமடு விவசாயப் படைமுகாமிலும் மற்றும் வீரர்களான எம். எஸ். செல்வராசா, எஸ். தங்கவடிவேல், கே. சண்முகவேலாயுதம், ரி. சண்முகராஜா, கே. சிவபாதசுந்தரம், எம். இரத்தினவடிவேல் ஆகிய ஆறுபேரையும் முறையே கல்குடா, கல்முனை, வெள்ளைவாயா ஆகிய முகாங்களிலும் வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கின்றனர்.

## வீரர்கள் மகிழ்ச்சி

விஸ்வமடு, வியா.

நெடுநாட்களாக வேயப்படமால் ஓட்டை ஓடிசல்கள் ஏற்பட்டிருந்து வந்த விஸ்வமடு விவசாயப்படை முகாமின் கூரைகளை முகாமுக்குப் புதிதாக வந்த பொறுப்பதிகாரி திரு. கே. விஸ்வநாதன் மேற்படிகூரைகளை வேய்வதற்கான ஒழுங்கள் செய்து வருவதையிட்டு வீரர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வீரர்கள் தாங்களே முகாம் கூரைகள் அனைத்தையும் வேய்ந்துதருவதாக பொறுப்பதிகாரியிடம் அறிவித்துள்ளனர்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

எங்க ஊர் ராஜா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா மட்டுநகர்

வெலிங்டன் யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-30 ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன் நடித்த

கணவன்

இசை: எம். எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன் ப. நீலகண்டன்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள் சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த குழந்தைக்காக

வல்வெட்டித்துறை ரஞ்சனா தியேட்டர் தினசரி 6-30, 9-30. பிரிபோயா, போயா காலை 10-30 எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த காவல்காரன்

வெஸ்லி சினிமா மானிப்பாய் தினசரி 6-30, இரவு 10-00 பிரிபோயா, போயா 2-30 மணி எம்.ஜி.ஆர். - சாவித்திரி நடித்த வேட்டைக்காரன் புதிய கொப்பி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் ஜெமினி - சரோஜாதேவி நடித்த தாமரை நெஞ்சம்

REGAL JAFFNA Daily 4-45, 7-00 & 9-45 p.m. Poya, Pre Poya 4 Shows Clint Eastwood in FOR A FEW DOLLARS MORE

MANOHARA JAFFNA Daily 4,45, 7 & 9-45 p.m. Jack Lemmon, Walter Motthau in THE ODD COUPLE (color)




ரிவர் பிராண்ட்

நாகம் பூசிய தகரங்கள்

குறைந்த செலவில் கூரையிடுவதற்கும், மூடுவதற்கும் நாகம் பூசிய தகரங்களையே நாடுங்கள்.

ஆற்றுக்குறியுடைய, நெளிவுள்ள நாகம் பூசிய தகரங்கள், விரும்பத்தக்க மானிகளில் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன. பிரபல்யமான எல்லா இரும்புக் கடைகளிலும் இத்தகரங்களை உடனே பெற்றுக்கொள்ளலாம்.

24, 26, 28 மானியுள்ளவை

பல்வேறு பாவனைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை குறிப்பாக தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகட்கும், உணவுக்களஞ்சியங்கட்கும், பண்டகசாலைகட்கும். கிடங்குகட்கும் உகந்ததாகும்.

24, 26, 28 மானியுள்ளவை

கோழி வளர்ப்பவர்கட்கும், சிறிய கைத தொழிலுக்கும், விவசாயிகளுக்கும், ஏனையோருக்கும் உகந்ததாகும்.

கூடிய நன்மைகள் ஐந்து. சிக்கனமானது. நீண்டகாலம் பாவிக்கக் கூடியது. இலகுவாக நிறுவக் கூடியது. தீ பிடித்தலையும், கால நிலைச் சேதத்தையும் தடுக்க வல்லது. குறைந்த செலவில் தாபரிக்கக் கூடியது.

ரிவர் பிராண்ட்

தயாரிப்பாளர்:

இலங்கை கல்வனைசிங் இன்டஸ்ரீஸ் லிமிட்.

தொழிற்சாலை: லேடி சுத்தரின் தோட்ட வீதி, இரத்மலானை. தொலைபேசி. (71) 7987

கொழும்பு அலுவலகம்: 450, பழைய சோனக தெரு, கொழும்பு 12. தொலைபேசி: 93143


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென். வியட்னுமிலிருந்து மேலும் 50,000 அமெரிக்க துருப்புக்கள் விலகிச் செல்லும்?

நியூயோர்க் ஆக.6

தென் வியட்னுமிலிருந்து மேலும் 50 ஆயிரம் அமெரிக்கத்துருப்புகளை விலக்கிக் கொள்வதுபற்றி அதிப‍ர நிக்சன் விரைவில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுபற்றி வெள்ளைமாளிகையதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில் மேற்கொண்டும் எவ்வளவுபேரை தென்வியட்னுமிலிருந்து விலக்கிக் கொள்வது என்பது பற்றி அதிபர் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லையென்று கூறினுர்.

தென்வியட்னுமில் இப்பொழுது 540ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் இருக்கின்றன. இவர்களில் 24ஆயிரம்பேரை விலக்கிக் கொள்வதுபற்றி அதிபர் நிக்சன் கடந்த ஜூன்மாதம் அறிவித்தார். அதன் பேரில் அமெரிக்க துருப்புக்களில் ஏராளமானவர்கள் தாயகம் திரும்பியுள்ளார்கள். இந்தமாத இறுதிக்குள் இவர்கள் முழுப்பேரும் திரும்பிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் வியட்னுமிலிருக்கும் தனதுபடைகளை விலக்கிகொள்வது பற்றிதாய்லாந்து விருப்பம் தெரிவித்திருக்கின்றது. தென்வியட்னுமில் படைகளை வைத்திருக்கும் தோழமை நாடுகள் தமது படைகளை விலக்கிக் கொள்வது பற்றி அமெரிக்காவுடன் ஆலோசனை நடத்தி வருகின்றன.

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் தென்வியட்னுமில் தமதுபடைகளை வைத்திருக்கின்றன.

அதிபர் நிக்சன் ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்காக அண்மையில் வெளியிட்ட திட்டத்தை பாரிஸ் அமைதிப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் வடவியட்னும் பிரதம பிரதிநிதி நிராகரித்திருக்கிறுர்.

இதற்கிடையில் தென் வியட்னுமிலிருந்து 25 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் விலக்கிக் கொள்ளப்படுவதற்குமாற்று நடவடிக்கையாக வடவியட்னுமும் குறிப்பிட்ட அளவு படைகளை விலக்கிக் கொள்ள முடிவு செய்திருப்பதாசக் கூறப்படுகின்றது.

# பிடித்த இடங்களை சிறிதும் விட்டுக் கொடுக்கபோவதில்லை

## இஸ்ரேல் பிரதமர் கண்டிப்பு

டெல்அவில், ஆகஸ்ட்.6

இஸ்ரேல் பிடித்துள்ள அரபுப் பகுதிகளில் சிறிதும் கூட விட்டுக் கொடுக்கப் போவதில்லை யென்று இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் அறிவித்திருக்கிறுர்.

இஸ்ரேல் அரசாங்க ஆதரவு தொழிற் கட்சிக் கூட்டமொன்றில் பேசிய திருமதி மெயர் நாள் தவருமல் தாக்குதல் களுக்குள்ளாகுவதன் மூலம் தினமும்அச்சத்தோடு வாழும் நிலையை மாற்றும் வரையும் எல்லைப் பகுதிகள் பலப்படுத்தப் படும்என்றுர்.

### 15 அரபு இளைஞர் கைது

ஜெருசலத்தில் அரபுப் பகுதியில் நாசவேலைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்சாட்டின் மீது 25 அரபுஇளைஞர்களை இஸ்ரேல் அரசாங்கம் கைது செய்திருக்கின்றது.

### அரபுத்தலைவர்கள் மகாநாடு

மேற்காசிய போர் நிலைமைக்கு ஒரு முடிவு கட்டும் வகையில் அரபு நாடுகளின் தலைவர்கள் மகாநாடொன்று நடைபெற வேண்டுமென்று ஜோர்டான் பிரதம மந்திரி யோசனை வெளியிட்டிருக்கின்றுர்.

# சுதந்திரத்தின் பலன்களை பாமரரும்பகிர்ந்துகொள்ளவேண்டு"

## ]பாங்கு தேசஉடமை பற்றி பாரதப்பிரதமர் விளக்கம்

புதுடில்லி, ஆகஸ்ட்.6

சுதந்திரத்தின் பலன்களை பாமர மக்களும் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்பதே காங்கிரஸ் கட்சியின் நோக்கமாகும். சோஷலிஸித்தை ... றது. மக்களின் ஆதரவுடன் நாம் சுதந்திரம் சம்பாதித்தது பிரிட்டிஷ் சர்க்காரை அகற்றுவதற் காக மட்டுமல்ல.

காங்கிரஸின் சில கொள் ... உழைத்துக் கொண்டயிருக்கவேண்டும்.

### தேருக்குத் தீ வைத்தவருக்கு

# தமிழ் நாடு புதிய அமைச்சர்கள்

சென்னை, ஆகஸ்ட் 6

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி தமது மந்திரி சபையில் புதிதாக திருவாளர்கள் நெடுஞ்செழியன், என். வி. நடராஜன், திரு. வேழவேந்தன் ஆகியவர்களையும் சேர்த்திருக்கிறுர். அல்லவா. அவர்களின் வாழ்க்கை குறிப்பு இங்கு வெளியாகின்றது.

### நெடுஞ்செழியன்

கல்வி-சுகாதார அமைச்சர் இரா. நெடுஞ்செழியனுக்கு 50 வயது ஆகிறது.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இவர், முதலில் பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியிலும், பிறகு அண்ணமலை பல்கலைக் கழகத்திலும் படித்து 'எம், ஏ.' பட்டம் பெற்றுர்.

1944-ல் திராவிட கழகத்தில் சேர்ந்தார். 1949-ல் தி. மு கழகம் தொடங்கப்பட்டதில் இருந்து அதில்முக்கியஇடத்தைபெற்று இருக்கிறுர். 1949-ல் இருந்து 1955 வரை தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளராகவும், 1960-ம் ஆண்டில் இருந்து தி. மு கழக அவைத்தலைவராகவும் பதவிவகித்தார்.

1967 பொதுத் தேர்தலில் சென்னை திருவல்லிக்கேணி தொகுதியில்இருந்து தமிழக சட்டசபைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார்.

அண்ணு அமைச்சரவையில் கல்வி-தொழில் அமைச்சராக இருந்தார்.

எழுத்தாற்றலும், பேச்சு வன்மையும் மிக்கஇவர், 'மன்றம் என்ற தமிழ்வாரஏட்டின் ஆசிரியர் ஆவார்.

1666-ம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாட்டின் போது கோலாலம்பூர் சென்று வந்தார்.

இவருடைய மனைவி டாக்டர் விசாலாட்சி. இவர்களுக்கு ஒரே மகள் இருக்கிறுர்.

சமீபத்தில் தி. மு கழகத்தின் பொதுச்செயலாளராக 2-வது முறையாகத்தேர்ந்து எடுக்கப்பட்டார்.

### என். வி. நடராஜன்

பின்தங்கிய வகுப்பினர் ...

பள்ளிக்கூடப் படிப்பை முடித்த உடனேயே அரசியலில் ஈடுபட்டார். 1937-ம் ஆண்டுவரை காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருந்தார். அப்பொழுது கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்து காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

தீர்மானம் தோல்வி அடைந்ததால், காங்கிரசில் இருந்துவிலகி ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தார். 1938-ம் ஆண்டு சென்னை மாவட்ட இந்தி எதிர்ப்புக் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பல போராட்டங்களிலும் ஈடுபட்டு இவர் 7 தடவை சிறைசென்று இருக்கிறுர். திராவிட கழகம் சார்பிலும் திராவிட முன்னேற்ற கழக சார்பிலும் பல இந்தி எதிர்ப்பு போராட்டங்களில்இவர் ஈடுபட்டார்.

1950-ம் ஆண்டு தி மு கழகம் முதல் முதலில் நடத்திய குன்றத்தூர் எழுத்து உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டார்

1957-ம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்திலும் 19?5-ல் நடைபெற்ற சட்ட எரிப்பு போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறைசென்றுஇருக்கிறுர்.

வ. உ. சி., திரு. வி க. ஆகியோருடன் பலதொழிற் சங்கங்களில் ஈடுபட்டு பணி செய்துள்ளார்.

1960-ம் ஆண்டு முதல் தொடர்ந்து தி. மு. கழகத்தின் அமைப்புச் செயலாளராக இருந்துவந்தார்.

இவருக்கு, சோமு, பன்னீர்செல்வம், பாண்டியன் சாக்ரடீஸ் ஆகிய4 புதல்வர்களும் ராணி, மணிமேகலை, ஆசைத்தங்கை ஆகிய 3 புதல்விகளும் இருக்கிறுர்கள். 'திராவிடன்' என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராக என்.வி.வி. நடராசன் இருந்திருக்கின்றுர்,

### வேழவேந்தன்

தொழிலாளர் நல அமைச்சர் வேழவேந்தனுக்கு30வயதாகிறது. 1967 பொதுத் தேர்தலில் செங்கல்பட்டு ...

நான்தான் அதிக பிள்ளைகளுள்ள அமைச்சர்:

# "குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் உயிர்ப்பலி அல்ல; அபாயமற்றது"

## மந்திகையில் திரு. ஈ. எல். சேனநாயகா

யாழ்ப்பாணம், வியா.

"சுகாதார அமைச்சராக நான் பதவியேற்ற குறுகிய காலத்துள் மூன்று தடவைகள் வடபகுதிக்கு வந்துவிட்டேன். கூடுதலான தடவைகளாக நான் உடுப்பிட்டிக்கே வந்துள்ளேன். இக்குறுகியகாலத்துள் மந்திகை ஆஸ்பத்திரி அடைந்திருக்கும் முன்னேற்றத்தைக் காணுமிடத்து இதன் மிகுதித் தேவைகளையும் உடனடியாக செய்துகொடுக்க வண்டுமென்றே நான் விரும்புகின்றேன். கூடிய கெதியில் உங்கள் மிகுதித் தேவைகளைச் செய்துமுடிப்பேன் என்றும் உறுதி கூறுகின்றேன்."

மந்திகை ஆஸ்பத்திரியில் பிரசவ வார்ட்டைத் திறந்துவைத்தபின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்தார். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில்அமைச்சர் மேலும் பேசியதாவது:-

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்பற்றி நாடு முழுவதும் நான் பிரசாரம்செய்துவரும் இவ்வேளையில் இங்கு பிரசவ வார்ட்டைத்திறந்து வைப்பது பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். அதற்குக் காரணம் உண்டு. இன்றில்லாவிட்டாலும் என்றைக்காவது பிறக்கும் குழந்தைகளின் நலனுக்கும் தாய்மார்களுக்கும் வசதிசெய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகவே இதனைத் திறந்து வைக்கின்றேன்.

அமைச்சரவையில் கூடிய பிள்ளைகள் உள்ளஅமைச்சர் நான்தான். பிரதமரே அடிக்கடி சொல்வார். குடும்பக் கட்டுப்பாடுபற்றி பிரசாரம் செய்யும் எனக்கு குடும்பக் கட்டுப்பாடு இல்லை என்று. குடும்பக்கட்டுப்பாடு உயிர்ப்பலி அல்ல என்றும் அபாயமானதல்ல என்றும் இங்குநான்குறிப்பிடவிரும்புகின்றேன்."

உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் இங்கு பேசியதாவது:

மந்திகை ஆஸ்பத்திரியின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் நாம் மீண்டும் ஒரு படியைத் தாண்டுகின்றோம். இலங்கையின் உச்சியில் வசிக்கும் வடமராட்சி மக்கள் சகல துறைகளிலும் உச்சநிலை வகிக்கிறுர்கள்.

தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்த நான்காண்டு காலத்தில் இரண்டு புதிய பகுதிகள் இங்கு திறக்கப்பட்டதோடு, புதிய 'எக்ஸ்-றே மண்டபத்துக்கும் அத்திபாரக் கல் நாட்டப்பட்டது எக்ஸ்-றே மண்டபம் 1970 ம் ஆண்டில் திறந்துவைக்கப்படும். அமைச்சர்கள் வடுகையில் தூங்கிக்கொண்டிருக்கும் அரசாங்க அலுவலகங்கள் அதுதுரிதமாக இயங்குவதைக் காணக்கூடியதாக விருக்கின்றது. எனவே அமைச்சர்கள் தொடர்ந்து இங்கு வந்துகொண்டிருக்க வேண்டும். மந்திரிகை ஆஸ்பத்திரிக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும். மின்சார சமையலறையையும், தண்ணீர்த் தாங்கியையும் மிக விரைவில் நிறுவித்தருமாறு அமைச்சரை திரு சிவசிதம்பரம் கேட்டுக் கொண்டார்.

ஆஸ்பத்திரி சார்பில் அமைச்சருக்கு தமிழில் வாழ்த்துப்பா ஒன்று பாடி வழங்கப்பட்டது. பருத்தித்துறை இலங்கை வங்கித் தலைவர் திரு. கந்தப்பு நன்றியுரை வழங்கினுர்.

அமைச்சர் ஆஸ்பத்திரி வார்ட்டுகளைச் சுற்றிப் பார்த்தபோது தாதிகள் டாக்டர்கள் உட்பட, மனநோயாளர்களும் அமைச்சரை மலர்மாலையிட்டு வரவேற்றனர். (கா. நி)

வேலைக்குப் படித்துத் தேறினார்.

பள்ளிக்கூடத்தில்படிக்கும்போது இருந்தே இந்திஎதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறைசென்றுர்.

அந்தமான் தீவில் உள்ள வேலை இல்லாத்தமிழ் மக்களின் துயரை நீக்க, அங்கு சென்று நீதிமன்றத்தில் வாதாடி வேலை வாங்கிக் ...

# 'தமிழர்கள் சந்தேக பிரஜைகளாகிவிட்டனர்'

— ஜி. ஜி.

அல்லைப்பிட்டி, வியா.

'ஒற்றைஆட்சிமூலமே தமிழர்கள் இந்நாட்டில் சுதந்திரமாக வாழமுடியும். நாம் வாழும்நாடுசிறியது இருஇனங்கள் வாழ்கின்ற இந் நாட்டிற்கு சமஷ்டி ஆட்சிசரிவர மாட்டாது. இவ் ஆட்சியின் மூலம்தமிழ் சமுதாயத்துக்கு எவ்விதவிமோசனமும்கிடைக்கப்போவதில்லை. சமஷ்டி ஆட்சி அமைப்பினுல் தமிழ் மக்கள் சிங்களப் பிரதேசங்களில் சென்று தொழில் செய்து வாழமுடியாது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமே முடங்கிக்கிடக்க வேண்டிவரும்கடந்தபலவருடங்களாக எனக்கு அரசியல் ஓய்வு அளித்தீர்கள். அதற்குப் பதில் தமிழரசுக் கட்சியினருக்கு தனி அதிகாரம் வழங்கி ஆட்சிமன்றத்துக்கு அனுப்பினீர்கள். அவர்கள் இவ்வளவு காலமும் சாதித்தது என்ன. இன்று இனப்பூசல்கள் ஏற்பட்டு தமிழர் சமுதாயம் உரிமைகளை இழந்த நிலையில் சந்தேகப் பிரஜைகளாகக் காலம் கடத்துகின்றது. இந்நிலைக்கு ஆளாக்கியவர்கள் யாரென்பதை தமிழ்மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்'

இவ்வாறு வேலணை மேற்கில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கூட்டமொன்றில் உரையாற்றுப்போது யாழ்ப்பாண ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

# 'ஜனசமூக நிலையங்களின் சேவை தேசிய ரீதியில் நமக்குத் தேவை'

## ஆண்டுவிழாவில் ஏ. எஸ். பி. அசீஸ்

யாழ்ப்பாணம், வியா.

'கிராமங்களின் முன்னேற்றத்துக்கும், இன ஒற்றுமைக்கும் சனசமூக நிலையங்களின் சேவை தேசிய ரீதியில் மிக மிக இன்றியமையாத ...

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பரிசில்களைவழங்கிப்பேசுகையில், மூத்தவிநாயகர் சனசமூகநிலையத்தின் சேவைகளையும் அதன் நிர்வாகிகளை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாங்கு தேசஉடமை பற்றி
# பாரதப்பிரதமர் விளக்கம்

புதுடில்லி, ஆகஸ்ட். 6 சுதந்திரத்தின் பலன்களை பாமர மக்களும். பகிர்ந்து கொள்ளவேண்டுமென்பதே காங்கிரஸ் கட்சியின் நோக்கமாகும். சோஷலிஸத்தை ஏற்படுத்துவதாக காங்கிரஸ் வாக்களித்தால்தான் மக்கள் அதை ஆதரித்தார்கள். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதில் காங்கிரஸ் மெத்தனமாக இருந்ததால் தான் மக்கள் நம்மைவிட்டு விலக ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

வங்கிகளை தேசஉடமையாக்கியதற்கே இப்படி கூப்பாடு போடுகிறார்களே இனிமேல் எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகளைக் கண்டு என்ன பாடுபடப்போகிறார்களோவென்று அவர் ஆச்சரியம் தெரிவித்தார்.

காங்கிரஸினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளில் நம்பிக்கை இல்லாத காங்கிரஸ் காரர்கள் குசுகுசு பிரசாரம் செய்யாமல் துணிந்து பகிரங்கமாக தமது ஆட்சேபனையை தெரிவிக்கட்டும் என்று திருமதி இந்திராகாந்தி சவால் விட்டார்.

டில்லி பிரதேச காங்கிரஸ் கமிட்டி பிரதமமந்திரியின் வீட்டு வாசலில் ஒரு பெரிய கூட்டத்தை சேர்த்துக் கொண்டு வந்தது. அந்தக் கூட்டத்தில் பிரதமர் இந்திரா பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது:

வங்கிகளை தேசஉடமையாக்குவதின் மூலம் நான் கம்யூனிஸத்திற்கு ஊக்கமளிப்பதாகச் சிலர் கூப்பாடு போடுகிறார்கள் நான் கம்யூனிஸ்டாக விரும்பியிருந்தால் யாரும் என்னைத் தடுக்க முடியாது. நான் எப்பாதுமே காங்கிரஸைச் சேர்ந்தவள்தான். காங்கிரஸ் கொள்கைகளை நிறைவேற்றுவதால் நான் கம்யூனிஸ்டாகிவிட்டேன் என்று சொல்லுவது எப்படி நியாயமாகும்?

ஒருபுறம் பாமர மக்கள் மற்றொருபுறம் சில தனிநபர்கள் இவ்விருவருக்குமிடையே உள்ள சடும் போராட்டத்தின் முதல்படிதான் வங்கிகளைத் தேச உடமையாக்கியது.

மக்களின் நலன்கள் முக்கியமா அல்லது சில தனிப்பட்ட நபர்களின் நலன்கள் முக்கியமா என்று காங்கிரஸ் இறுதியாக முடிவு செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது.

காங்கிரஸ் எப்போதுமே பாமர மக்களின் ஸ்தாபனமாகத்தான் இருந்து வருகிறது. மக்களின் ஆதரவுடன் உழைத்துக் கொண்டிருந்து நாம் சுதந்திரம் சம்பாதித்தது பிரிட்டிஷ் சர்க்காரை அகற்றுவதற்காக மட்டுமல்ல.

காங்கிரஸின் சில கொள்கைகளை காங்கிரஸ் காரர்களிலேயே சிலா ஆட்சேபிக்கிறார்கள். இதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்னல் இவ்வளவு காலமாகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தார்களா?

பாங்குகளை தேச உடமையாக்கியதைப் பத்திரிகைகளும் கண்டித்திருக்கின்றன. சிலரிடம் பத்திரிகைகள், பணம் இரண்டும் இருக்கின்றன. பத்திரிகைகள் மூலம் இவர்கள் பாமர மக்களையும் என்னையும் இந்நாட்டுப் பெண் குலத்தையும் எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்குறார்கள்.

பாங்குகளை தேச உடமையாக்கியதை ஒரு சிலரைத் தவிர கட்சியிலுள்ள எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இவர்களும் கூட காங்கிரஸ் கொள்கைகளுக்குக் கட்டுப்படுவார்கள் தான். அப்படியிருந்தும் இவர்கள் இந்தக் கொள்கைகளை எதிர்த்துப் பேசுகின்றார்கள்-

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் எனக்கு அளித்துள்ள அபரிமிதமான ஆதரவு எனக்கு ஊக்கம் கொடுக்கிறது. இந்த ஒத்துழைப்பும், ஆதரவும் காங்கிரஸ் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு எனக்குபலம் கொடுக்கும்.

வங்கிகளை தேசஉடமையாக்கியதால் அவை செயல்படும் விதம் பாதிக்கப்பட்டு விடுமென்று கூறுவதுசரியாகாது. முன்பு சில கைத்தொழில்களையும் ஆயுள்இன்ஸூரன்ஸையும் தேசஉடமையாக்கினோம். இவை சரியாக வேலைசெய்யவில்லையென்று யாராவது சொல்ல முடியுமா? அவை நன்றாகத்தான் வேலை செய்கின்றன. தேசஉடமையாக்கப்பட்ட வங்கிகளும் இனி அதிக திறமையுடன் இயங்குமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வங்கிகளை தேச உடமையாக்கியது விவசாயிகள் தொழிலாளர்கள் மற்றும் ஏழை எளியவர்களின் நிலைமையை உயர்த்துவவற்கான மற்றொரு படியாகும் ஆனால் இது நாட்டின் எல்லா இன்னல்களையும் ஒரே நொடியில் போக்கிவிடக்கூடிய ஒரு சஞ்சீவி மருந்து என்று ஏமாந்துவிடக் கூடாது. நம்முடைய லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு நாம் ஓயாமல்

## தெருக்குத் தீ வைத்தவருக்கு 2 வருடம் சிறை

சென்னை, ஆகஸ்ட் 6 தெருக்குத் தீ வைத்ததாக கைது செய்யப்பட்ட தனபால் என்ற வாலிபருக்கு 2 வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம் பதுராந்தகம் ஏரிகாத்த பெருமாள் கோவில்தெருக்கு தீவைத்தாக இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருடைய மனைவி டாக்டர் விசாலாட்சி. இவர்களுக்கு ஒரே மகள் இருக்கிறார்.

சமீபத்தில் தி. மு கழகத்தின் பொதுச்செயலாளராக 2-வது முறையாகத்தேர்ந்து எடுக்கப்பட்டார்.

### என். வி. நடராஜன்

பின்தங்கிய வகுப்பினர் நலஅமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள என். வி. நடராஜன் 1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் தேதி பிறந்தார். செங்கல்பட்டு மாவட்டம் ஞாயிறு கிராமம் இவரது சொந்த ஊர்.

இவரது தந்தை பெயர் விஜயரங்கம், தாய் பெயர் தனலட்சுமி அம்மையார் மனைவி பெயர் புவனேசுவரி புதல்விகளும் இருக்கிறார்கள். ,திராவிடன்' என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராக என். வி. வி. நடராசன் இருந்திருக்கின்றார்,

### வேழவேந்தன்

தொழிலாளர் நல அமைச்சர் வேழவேந்தனுக்கு30வயதாகிறது. 1967 பொதுத் தேர்தலில் செங்கல்பட்டு மாவட்டம் கும்மிடிப்பூண்டியில்இருந்து தமிழ்நாடுசட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம் காரணி கிராமத்தில் பிறந்தவர். சென்னைலொயோலா கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் படித்தார். பிறகு சட்டக்கல்லூரியில் வக்கீல் ...

பள்ளிக்கூடத்தில்படிக்கும் போது இருந்தே இந்திஎதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறைசென்றார்.

அந்தமான் தீவில் உள்ள வேலை இல்லாத்தமிழ் மக்களின் துயரை நீக்க, அங்கு சென்று நீதிமன்றத்தில் வாதாடி வேலை வாங்கிக் கொடுத்து சிக்கலை தீர்த்தார்.

கும்மிடிப்பூண்டி- பொன்னேரி தாலுகாக்களின் விவசாயிகளின் நலனுக்காக உழைத்தார்.

### எழுத்தாளர்

தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பல பதவிகளை வகித்தார். தமிழில் கதைகளையும் எழுதி உள்ளார். மாணவர் சங்கம் ஆகியவற்றிலும் ஈடுபாடுகொண்டவர்.

திருமணம் ஆன இவருக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது.

# செவ்வாய்க்கிரகத்தில் மிகப் பெரிய எரிமலைகள்
# உயிர்கள் வாழவே முடியாது

ஹூஸ்டன், ஆகஸ்ட் 6 செவ்வாய்க்கிரகம் பற்றி மெரினர்-7 அனுப்பியுள்ள படங்கள் மூலம் விஞ்ஞானிகள் புதிய தகவல்களை கண்டு பிடித்துள்ளனர்.

ஏற்கனவே மலைகள் என்றும், கால்வாய்கள் என்றும் கருதப்பட்டவையாவும் பெரிய எரிமலைகள் என்றும் எரிமலைவாயில்கள் என்றும் தெரியவந்துள்ளதாம்.

மெரினர் 7 செவ்வாய்க் கிரகத்தை மிக அருகிலிருந்து எடுத்தனிப்பியுள்ள படங்களின் மூலம் இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன. செவ்வாய்க் கிரகத்தில் 'நைட்ரஜன்' வாயு இல்லையென்பதும் தெளிவாகியுள்ளதாம். உயிர் வாழ்வதற்கு இந்த வாயு அத்தியாவசியமென்று கருதப்படுகின்றது.

### இன்னும் பத்தாண்டுகளில்

இதற்கிடையில் இன்னும் பத்து ஆண்டுகளில் எல்லாக் கிரகங்களுக்குமே ரொக்கட் அனுப்பி சோதனைகள் நடத்தப் போவதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

பூமியைப் போலவே, சுக்கிரன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ மற்றும் பல கிரகங்கள் சூரியனை சுற்றிக் கொண்டு இருக்கின்றன.

இந்த கிரகங்கள் எல்லாமே அடுத்த (1970) ஆண்டு வாக்கில் பூமியை நெருங்கி வரும்.

அதன்பின் சுமார் 185 ஆண்டுகளுக்கு பிறகுதான் அவை மீண்டும் பூமியை நெருங்கி வரும். அதனால் இன்னும் 10 ஆண்டுகளுக்குள் இந்த கிரகங்களுக்கு ராக்கெட்டுகளை அனுப்ப அமெரிக்க நிபுணர்கள் தீர்மானித்து இருக்கிறார்கள்.

இப்படி பூமியை நெருங்கி வரும்போது, கிரகங்களுக்கும் பூமிக்கும் இடையே தூரம் மிகவும் குறைவாக இருக்கும். இந்த சமயத்தில் ராக்கெட்டுகளை அனுப்பினல் ஏராளமான செலவு மிர்சம் ஆகும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இந்த வானவெளி பயணத்துக்கான திட்டத்தை அமெரிக்க வானவெளி ஆராய்ச்சிக் கழகம் தயாரித்து இருக்கிறது. இந்த திட்டத்தை அமெரிக்க அரசாங்கம் ஏற்றுக் கொண்டதும், திட்டம் செயலாற்றப்படும்.

அதன்படி அடுத்த ஆண்டு முதல் சுமார் 11 ஆண்டுகளுக்கு மற்ற கிரகங்களுக்கு அமெரிக்கா ராக்கெட்டுகளை அனுப்பும்.

### 11 ஆண்டுகள்

இந்த திட்டப்படி, 1974 ம் ஆண்டு சுக்கிரனுக்கு ஆள் இல்லாத ராக்கெட் அனுப்பப்படும், 1977-ல் சுக்கிரனை சுற்றி பறப்பதற்காக ஒரு ராக்கெட்டு அனுப்பப்படும். அதே ஆண்டில், சனி, புளூட்டோ ஆகிய கிரகங்களுக்கும் ராக்கெட்டுகள் அனுப்பப்படும்.

1979-ம் ஆண்டு யூரேனஸ், நெப்டியூன் ஆகிய கிரகங்களுக்கு மற்றொரு ராக்கெட்டு அனுப்பப்படும் 1980-ம் ஆண்டு சுக்கிரனில் இறங்கி ஆராயும் ராக்கெட்டு அனுப்பப்படும்.

### 260 கோடி

மேலே குறிப்பிட்ட கிரகங்களில் பூமிக்கு அருகில் உள்ள கிரகம் சுக்கிரன் ஆகும். பூமியில் இருந்து, தொலைவில் உள்ள கிரகம் புளூட்டோ. இதில் பூமியில் இருந்து சுக்கிரன் 36 கோடி மைல் தூரத்திலும், புளூட்டோ 260 கோடி மைல் தூரத்திலும் உள்ளன.

இந்த கிரகங்களில் சுக்கிரன், சனி ஆகியவை பூமியை விட பலமடங்கு பெரியவை. அதனால் இந்த கிரகங்களில் இழுப்பு விசை அதிகமாக இருக்கும்.

ராக்கெட்டுகள் பாதி தூரம் போன பிறகு இந்த கிரகங்களின் இழுப்பு விசை காரணமாக தாமாகவே அந்த கிரகங்களை நோக்கி பறக்கும். இதனல் ராக்கெட்டின் எரிபொருள் செலவு மிகவும் குறையும்.

### பாதுகாப்பு

ஆனல் பூமியை விட இந்த கிரகங்கள் பலமடங்கு பெரிதாக இருப்பதால் இவைகளின் இழுப்பு விசையுள்ள தூரத்தில் ''அழுத்தம்'' அதிகமாக இருக்கும்.

இதனல் இந்த கிரகங்களுக்கு அனுப்பப்படும் ராக்கெட்டுகள் பாதுகாப்பான முறையில் அமைக்கப்படும்.

இல்லா விட்டால் இந்த ராக்கெட்டுகள் எரிந்து அதில் உள்ள கருவிகள் அழிந்து விடும்.

மேற்கண்ட தகவல்களை அமெரிக்க வானவெளி ஆராய்ச்சிக்கழகம் அறிவித்து இருக்கிறது.

## தேசிய ரீதியில் நமக்குத் தேவை'
### ஆண்டுவிழாவில் ஏ. எஸ். பி. அசீஸ்

யாழ்ப்பாணம், வியா. 'கிராமங்களின் முன்னேற்றத்துக்கும், இன ஒற்றுமைக்கும் சனசமூக நிலையங்களின் சேவை தேசிய ரீதியில் மிக மிக இன்றியமையாததாகும். படிக்கும் மாணவர்களும், படித்தவாலிபர்களும் ஆங்காங்கு ஜனசமூக நிலையங்களையும் கிராம முன்னேற்றச் சங்கங்களையும் நிறுவ முன்வரல்வேண்டும்'.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் ஜனுப் எஸ். ஐ. அசீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூகநிலையத்தின் 16வது ஆண்டுவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. நிலையத்தலைவர் திரு ஆ. சண்முகம் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜனுப் அசீஸ் மேலும் பேசுகையில், பெருகிவரும் படித்த வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க கிராமரீதியில் முயற்சிகள் எடுக்கவேண்டும் என்றும், இதற்கு சனசமூக நிலையங்கள் முன்னின்று உழைக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பரிசில்களைவழங்கிப்பேசுகையில், மூத்தவிநாயகர் சனசமூகநிலையத்தின் சேவைகளையும் அதன் நிர்வாகிகளையும் பாராட்டிப்பேசினர்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. நா. மார்க்கண்டு திரு. குழந்தைவேலு ஜே. பி. ஆகியோரும் இங்கு சமுகம்கொடுத்திருந்தனர். இன்னிசை, மெல்லிசை, நடனம், நாடகம் ஆகிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(கா. நி.)

## புதிய தலைவர்

சுழிபுரம், வியாழன் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் புதிய தலைவராக திரு. வி. இராசசுந்தரம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தின்போதே இத்தெரிவு நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. த. சம்பந்தமூர்த்தி தலைமைவகித்தார்.


0231

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

ஏ. எவ். ரேமண்டஸ்

ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏ எவ் ரேமண்ட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'சத்தியத்தையும் அன்பையும் உபாசிப்பவன் நாளைக்காக ஒன்றும் சேமித்து வைக்கமாட்டான்.
— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 23-ந் திகதி (7 - 8 - 69)


## மக்கள் தொகைப் பெருக்கம்

இலங்கையில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால்1993ம் ஆண்டில் இலங்கையின் மக்கள் தொகை இரண்டரைக் கோடியாக அதிகரித்துவிடும் என்று உலக மக்கள் தொகைக் கணிப்பு நிறுவனம் வாஷிங்டனிலிருந்துவிடுத்த அறிக்கையில் பயமுறுத்துகிறது.

நமது நாட்டில் பிறப்புவிகிதம் அதிகரித்துள்ளதாகவும் இறப்பு விகிதம்குறைந்துள்ளதாகவும் இதுவே மக்கள் தொகை அதிகரித்து வருவதற்குக் காரணம் என்றும் அந்தப் புள்ளிவிபர அறிக்கை கூறுகிறது. இலங்கையில் மட்டுமல்லஇந்தோனேஷியா, இந்தியா மற்றும் உலக நாடுகள் பல வற்றிலும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. அதிகரித்துவரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இப்போதுள்ள விகிதப்படி உலகில்மக்கள் தொகை அதிகரித்தால் இன்னும் சில ஆண்டுகளில் உலகில் பஞ்சமும் பசியும்தான் மிஞ்சுமென்று நிபுணர்கள்பலர்எச்சரிக்கை செய்துள்ளனர். இந்த ஆபத்தைத் தடுப்பதற்கு ஒரேவழி குடும்பக்கட்டுப்பாடுதான் என்று ஆலோசனை கூறப்பட்டதைத்தொடர்ந்து இலங்கை உட்பட உலக நாடுகள் பலவும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம் வகுத்து அதற்கெனதனியாக அமைச்சையும் பல இலாகாக்களையும் ஏற்படுத்தி தீவிர பிரசாரமும் செய்து வருகின்றன. குடும்பக்கட்டுப்பாட்டுக்கு பல்வேறு முறைகளையும் பலநாடுகளும் வகுத்துள்ளன. குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலவச ஆலோசனைகள் கூறப்பட்டுவருவதுடன் உதவியும் அளிக்கப்படுகிறது. கம்யூனிஸ்ட் நாடுகள் பலவற்றிலும் குடும்பக்கட்டுப்பாடு அனுசரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. மக்கள் பெருக்கத்தில்தான் தங்கள் நாட்டின் பலமும் முன்னேற்றமும் தங்கியிருப்பதாக அந்த நாடுகள் கருதுவதே இதற்குக் காரணம் அந்த நாடுகளில்குழந்தைகளை வளர்க்கும் பொறு-

டுப்படுத்துவது பல புதியபுதிய பிரச்னைகளையே உருவாக்கும். மணமாகாத இளம் பெண்களும் ஆண்களும் தவறான வழியில் செல்வதற்கு இந்த செயற்கைமுறை குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் வழிவகுக்கிறது. சமுதாயத்தின், நாட்டின் ஒழுக்கத்தையே கெடுத்து நாட்டையும் சமூகத்தையும் பலஹீனப்படுத்துகிறது. இதனால்தான் பெரியோர்கள் பலர் இதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர். இங்கும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் அதற்குத் தெரிவித்த காரணம்தான் வேடிக்கையானது. குடும்பக் கட்டுப்பாட்டு முறையை சிங்கள மக்கள் தான் அதிகம் பின்பற்றுவதால் இன்னும் சில வருடங்களில் சிங்களமக்கள் சிறுபான்மையினராகி விடுவரென்றும் தமிழரே இங்கு பெரும்பான்மையினராக இருப்பரென்றும் அவர்கள் கூறினர். இது ஆதாரமற்ற அச்சம் என்று குடும்பக் கட்டுப்பாட்டு இலாகாவினர் புள்ளிவிபரத்துடன் மறுத்துள்ளனர்.

மக்கள் தொகை அதிகரித்து வருகிறது என்பது உண்மையே. இதற்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லையென்பதும் உண்மைதான். மக்களுக்கு உணவு அளிப்பதற்காக உணவு உற்பத்தியை எப்படி அதிகரிக்கலாமென்பதிலும் மக்களின் உழைப்புச்சக்தியை எவ்வகையில் பயன்படுத்தலாமென்பதிலும் உலகநாடுகளும் நிபுணர்களும் ஆராய்ந்து வழிவகைகள் காண்பதுதான் சிறப்பு.

ஆஸ்திரேலியாவளம்நிறைந்த பெரியதேசம். அங்கு மக்கள் தொகை மிகவும் குறைவு. ஆனால் அந்த நாட்டில் ஆசியர் சென்று குடியேற முடியாது. ஆசிய நாடுகளிலிருந்து குடியேறுவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் அனுமதியளிப்பதில்லை. ஆஸ்திரேலியாவைப்போன்று வேறு சில நாடுகளும் நிறவேற்றுமையைப் பின்பற்றுகின்றன. இதனால் வளம் இருந்தும் நிலப்பரப்பிருந்தும் அதை மக்கள் ...

# உயர்மனம் படைத்த சிங்கள மக்கள் தவறைவிரைவில்உணர்வர்

# தமிழர் பொறுத்திருப்பதால் ஒன்றும் பாழாகிவிடாது

தமிழ் மக்களின் அரசியல் நிலைபற்றி திரு. ஜேம்ஸ் ரி. இரத்தினம் இக் கட்டுரையில் ஆராய்கிறார்.

மே மாதம் 15-ந் திகதிய 'சிலோன் ஒப்சேர்வர்' பத்திரிகையில், 1920 ஆண்டுகளில் பல்கலைக்கழகக் கல்லூரியின் வார்டனாகவும், பேராசிரியராகவும் இருந்த மதிப்பிற்குரிய செல்லப்பா சுந்தரலிங்கம் அதன் நிருபருக்களித்த ருசிகரமான பேட்டி பிரசுரமாகியிருந்தது.

சொலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயகா, டொன் ஸ்டீபன் சேனநாயகா, சாமுவேல் ஜேம்ஸ், வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஆகிய பேர்களைப் பற்றிய பேராசிரியரின் கிண்டல் வார்த்தைகளுக்கும் பேட்டிகளில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கும் என்ன தொடர்போ நாமறியோம். இந்தப் பெருமக்களின் மூதாதையர்களையும்கூட இழுத்துவந்து, தனது வெறுப்புக்கு ஆளாக்கியிருக்கிறார்.

என்றாலும்கூடச் சூழ்நிலைகளுக்குத் தக்கபடி மாறுவதில் பேராசிரியரும் விலக்கல்ல. அவருக்குத் தேவையெனக் கண்டபோது வேட்டியை உதறித் தள்ளிவிட்டு கொழும்பிலும், ஒக்ஸ்போர்ட்டிலும காற்சட்டைக்குள் தஞ்சம்புகவில்லையா, என்ன? நமது பேராசிரியரின் பிரமாதமான மூளை, 74 வயதிலேயே இந்தக் கீழ்நிலைக்கு வந்திருப்பது வேதனைக்குரியதுதான். நாமும் பேராசிரியரின் வயதினை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணும்போது இந்த நிலை எமக்கேற்படாமல் 'இறைவா நீதான் காப்பாற்ற' வேண்டும்' என்று இறைஞ்சாமல் இருக்க முடியவில்லை.

"நல்ல உத்தியோகத்தையும் நல்ல மனைவியையும் பெற, ஆங்கிலம் படிப்பது ஒன்றும் கேவலமான செயல் தோன்றவில்லை.

பேராசிரியரின் வாழ்வுகூட இந்தவிதிக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. பேராசிரியரின் துணைவியாராக வந்தமைந்துள்ள அம்மையார் 'நல்ல மனைவி' என்ற இலக்கணத்திற்கு ஒரு உதாரணமாகவே எல்லாராலும் ...

குறுதியளிக்கப்பட்ட! புற்றுநோய் தடுப்பு நிலையத்தை கண்டிக்குக் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

கண்டி சுகாதார அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயகாவின் தொகுதி என்பது இங்கு கவனிக்கத் தக்கது. வட்டார அபிலாசைகளிலிருந்து விடுபட்டு தேசியக் கண்ணோட்டத்தில் பிரச்னைகளை அணுக முடியாதவராக சுகாதார அமைச்சர் இருக்கிறார்!

டச்சுக்காரர் காலத்திலும்சரி அதன்பின் நடைபெற்ற போர்த்துக்கீசிய பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலும் சரி எல்லா விதத்திலும் கொழும்புக்கு அடுத்த முக்கிய நகரமாக யாழ்ப்பா

**ஜேம்ஸ் ரி. இரத்தினம்**

ணமே கணிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இன்று இந்த முதன்மையான நிலையைத் திட்டமிட்டு மாற்ற முனைகிறார்கள் இப்படியான மாற்றாந்தாய் மனப்பான்மையில் தமிழர்களை இதுவரை யாருமே நடத்தியது கிடையாது. பொருளாதாரத்துறையிலும்சரி கல்வித் துறையிலும் தொழில்த் துறையிலும் மருத்துவத் துறையிலும், கலாச்சாரத் துறையிலும் தமிழ்ப்பிரதேசம் வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகம் நவீனதுறைமுகமாகுமென்ற யாழ்ப்பாணத்தாரின் கனவு இன்னும் கனவாகவே இருக்கிறது. தமிழர்களைப் பிற மாநிலங்களோடு இணைக்கும் ரயில் சேவைத் தொடர்பு கேவலமான நிலையிலே தொடர்ந்து இருக்கிறது.

**பல்கலைக் கழகங்கள்**

கிழக்கில் ஒன்றும் வடக்கில் ஒன்றுமாக வடக்கு...

துன்புறுத்தலினதும், பாரபட்சமான தன்மையினதும் வெட்கக் கேடான இந்த உதாரணங்கள் உலகின் மனச்சாட்சியையே தட்டி எழுப்புவதற்குப் போதுமானவை. இவை தொடர்ந்து நீடித்தால் உலகின் மனச்சாட்சி விழித்துக்கொள்வது திண்ணம் எனினும் வடக்

கையும் கிழக்கையும் சேர்ந்த நம்நாட்டுமக்கள் இன்னும் சிறிதுகாலம் பொறுமை பூண்டு இந்த அநீதியைசகித்துக்கொள்வார்களாக.

**சீக்கிரமே உணர்வர்**

ஏனெனில், மொழியால் மட்டுமே வேறுபட்டு, இனத்தால் தமிழர்களோடு ஒன்றான நமது சிங்கள சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் கூட மனச்சாட்சி என்ற ஒன்று உண்டு அவர்களில் நிச்சயமாய் பெரும்பான்மையினராக உள்ள உயர்மனம் படைத்தோர் தங்களுடைய பிழைகளை சீக்கிரம் உணரத்தான் போகிறார்கள். பொறுத்திருப்பதால் ஒன்றும், பாழாகிவிடாது 70 வருடங்களோடு தேசங்களின்வாழ்க்கை முற்றுப்பெற்றுவிடுவதில்லை (தொடரும்)

# 'ஆலய கதவுகள் தானாக திறக்கும்'

உடுப்பிட்டி, வெள்ளி

"அமைதியும், பண்பாடும் மிக்கதமிழ் கலாச்சாரம்தீண்டாமை என்னும் நோயால் படிப்படியாக அழிந்து வருகின்றது. அன்பு வழியில் சுமுகமாகத் தீர்க்கக் கூடிய ஆலயப் பிரவேசப் பிரச்னையை அரசியல் சுயநலத்துக்குப் பயன்படுத்துவது கோழைத்தனமானது. பலாத்காரவழி ஒருபோதும் வெற்றியைத் தராது. ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கும் உயர் வகுப்பினரும் அதனை எதிர்ப்பதற்குக் காரணம் பலாத்கார முயற்சியேயாகும்."

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ் மன்றத் தலைவர் டாக்டர் திரு. ஆர். திருச்சிற்றம்பலம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழும், சைவமும்வாழ வேண்டுமானால் தீண்டாமை ஒழியவேண்டும். இதற்குப் புரட்சியை நம்பும் அரசியல் கட்சிகள் தமது போராட்டங்களைக் கைவிடுவதே பரிகாரம் ஆகும். சந்திரனில் காலடி எடுத்து வைத்துவிட்ட மனிதனின் மனம் மாறியேதீரும். அப்பொழுது ஆலயக்கதவுகள் தானாகத் திறந்து கொள்ளும் எனவும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பருத்தித்துறை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டில் வந்து சுடும்படி கூறி...

## இலங்கை டாக்டருக்கு கௌரவ பட்டம்

லண்டன், ஆக. 6

பிரிட்டனிலுள்ள சாம்ராஜ்ய டாக்டர்கள் சிலர், சமீபத்தில் கிளாஸ்கோ நகரிலுள்ள ரோயல் வைத்தியக் கல்லூரியின் கியூ. யு. ஏ. பட்டம் அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் இலங்கையர். இவர் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த டாக்டர் சிவப்பிரகாசம்விஸ்வநாதன் கிளாஸ்கோ சர்வகலாசாலையின் வைத்தியத்துறைப்பட்டதாரியான டாக்டர். விஸ்வநாதன் பெஸ்லி நகரிலுள்ள ரோயல் அலெக்ஸாந்ரா வைத்தியசாலையில் சமீபகாலமாகக் கடமையாற்றி வருகிறார்.

## நல்லூர் கி. ச. உபதலைவர்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் கிராமசபையின் புதிய உபதலைவராக திரு இரத்தினம் சிதம்பரநாதன் ...

# ஐயாறன் எழுதுவது

வண்ணை சிவன்கோயிலில் நேற்று அம்மன் திருவிழாவுக்குக் கொடி ஏறியுள்ளது. இந்து சமயத்திலே பெண்மைக்குச் சரிசமமான இடம் மட்டுமன்றி விசேஷ இடமும் அளிக்கப்படுகிறதென்பதற்கு இது அத்தாட்சியாகும்.

சென்னையிலே நடைபெற்ற அறுசமய மகாநாட்டிலே புதுக்கோட்டை ஸ்ரீசாந்தானந்தசுவாமிகள் சக்தி வழிபாட்டின் மேன்மையைப் பற்றிப் பேசினார். "தாய் வழிபாடு மிகவும் சுலபமானது. அம்மா என்று அழைப்பது கஷ்டமா? பாருக்கெல்லாம் தாயாகிய பராசக்தி, கன்றின் குரலைக் கேட்டுக் கனிந்துவரும் பசுவைப்போல், நம் கூக்குரலைக் கேட்டு ஓடிவரக் காத்திருக்கிறாள். ஏனென்றால், அவள் கருணையின் வடிவம்; அன்பின் எல்லை" என்றார்.

கி. வா. ஜ. அவர்கள் பின்னர் பேசுகையில், "சிவபெருமானின் ஒரு பாகமாகச் சக்தி இருப்பதாகச் சொல்லுவதை விடுத்து, அருணகிரியாரும், சங்கநூல் ஆசிரியரும், அம்பிகையின் ஒரு பாகமாகச் சிவபெருமான் விளங்குவதாகக் கூறியுள்ளதை நினைவுபடுத்தி, சக்தி வழிபாட்டுக்குரிய ஏற்றத்தை விளக்கி, அந்தப் பரமேசுவரி நம்மைக் காத்தருளவேண்டும்" என்றும் கூறினார்.

ஒரு சுலோகத்திலே ஆதிசங்கரர் பார்வதியைப் பார்த்துக் கேட்கிறாராம், "மூப்பையும் பிணியையும் அழிக்கும் அமிர்தத்தை உண்ட தேவர்கள் மாண்டு விட்டார்கள். ஆனால் ஆலகால விஷத்தை விழுங்கிய உன் கணவரோ உயிரோடு இருக்கிறாரே, ஏன் தெரியுமா? அது உன் காதுகளை அலங்கரிக்கும் தாடங்கத்தின் மகிமை. உன் கழுத்தை அலங்கரிக்கும் மாங்கல்யத்தின் பெருமை."

வீடுகளில் மாக்கோலம் போட்டு, காவியால் அதற்கு எல்லை கட்டுவது "சிவனை சக்தி கட்டுப்படுத்துவதைக் குறிக்கிறது" என்று மற்றொருவர் குறிப்பிட்டார்.

விஷ்ணுதான் சக்தியென்றும் "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்று அப்பர் அடிகள் பாடியுள்ளார். சொல்லும் அதன் கருத்தும் எவ்விதம் இணைபிரியாததோ அதுபோல சிவமும், சக்தியும் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் ...

ததும், பிசுவிப்பிசுவி ஒன்பது காசுவீதம் மூன்று கட்டுக் கீரையும், வேறு காய்கறிகளின் விலையைக் குறைத்தும் வாங்கிக்கொண்டு என் மனைவி வீட்டுக்குள் வந்து, இன்று 13 காசு மிச்சம் பிடித்துவிட்டேன்" என்று வெற்றிநடை போட்டுக்கொண்டு பெருமிதத்துடன் கூறினாள்.

"வாசலில் இருந்த காய்கறிக்காரியின் புடவை பல ஒட்டுகள் போட்டுக் கிழிந்திருந்தது. பாவம்! ஏழையான அவள் கேட்ட விலையைக் கொடுத்துவிடக் கூடாதா?" என்று சொன்னேன், "உங்களுக்கு அது ஒன்றும் தெரியாது. பேசாமலிருங்கள்" என்று ஒரு போடுபோட்டு என் வாயை அடக்கிவிட்டாள் சகதர்மினி.

அன்று பேப்பரில் ஒரு ஜவுளிக்கடை விளம்பரம் வந்திருந்தது. அங்கு பல புதிய 'டிசைன்'கள் வந்திருப்பதாகவும், அதைப் பார்க்க, மாலையில் ஒருமணி நேரம் முன்னதாகவே ஆபீஸிலிருந்து வந்துவிடுமாறும் உத்தரவு போட்டாள். அந்த உத்தரவை மீறமுடியுமா? அப்படியே முன்னதாக வந்து, குறித்த கடைக்கு அழைத்துச் சென்றேன். புதிய டிசைன்களைப் பார்க்கத்தான் சென்றோம். எதுவும் வாங்குவதற்கு அல்ல.

"அங்கு சென்றதும், கடைக்காரர் 'வருக வருக' என்று கூறி, இரண்டு 'கொக்கோ கோலா' பானங்களைக் கொண்டுவரச்செய்து உபசரித்தார். இரண்டு மணி நேரம் என் துணைவியார் பல புடவைகளையும் புரட்டிப்புரட்டிப் பார்த்து, முடிவில் ஒரு காஞ்சீபுரம் புடவையை எடுத்துத் தனியே வைத்ததும் எனக்குப் 'பகீ'ரென்றது. விலை என்ன? என்று கேட்டதும் 'நூறு ரூபாய்' என்றார் சேல்ஸ்மென். மறுபேச்சுப் பேசாமல், "பில் போடு" என்று உத்தரவு. பணத்தை அழுதேன். புடவையை எடுத்துக்கொண்டு வெற்றிகரமாக அவள் வெளியே வந்தாள்.

"புடவை சற்றே அதிக விலைபோல் இருக்கிறதே" என்று தயக்கத்துடன் சொன்னேன். "நானும் அப்படித்தான் நினைக்கின்றேன். என்றாலும் அந்த இடத்தில் பிசுவி பேரம்பேச முடியுமா? ஆனால் டிசைன் நன்றாக இருக்கிறதல்லவா ?" என்று பதில் கிடைத்தது. என்ன செய்வது?

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

குடும்பக்கட்டுப்பாடு அனுசரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. மக்கள் பெருக்கத்தில்தான் தங்கள் நாட்டின் பலமும் முன்னேற்றமும் தங்கியிருப்பதாக அந்த நாடுகள் கருதுவதே இதற்குக் காரணம் அந்த நாடுகளில்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பையும் அரசே எடுத்துக் கொண்டுவிடுவதால் பிரச்னையும் குறைவு.

குடும்பக்கட்டுப்பாடு அவசியம்தான். காந்திமகாத்மா கூறியதுபோல இதுமனக்கட்டுப்பாட்டினுல் ஏற்படவேண்டுமேயொழிய செயற்கைமுறைகளினுல் குடும்பத்தைக் கட்டுப்படுத்த முடியாது. ஆசிய நாடுகளிலிருந்து குடியேறுவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் அனுமதியளிப்பதில்லை. ஆஸ்திரேலியாவைப்போன்று வேறு சில நாடுகளும் நிறவேற்றுமையைப் பின்பற்றுகின்றன. இதனுல் வளம் இருந்தும் நிலப்பரப்பிருந்தும் அதை மக்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியாதிருக்கிறது.

இந்நத்தடைகளை நீக்கிஎங்கெல்லாம் நீரும் நிலமும் இருக்கிறதோ அங்கெல்லாம் மக்கள் சென்று குடியேறி வாழலாமென்ற நிலை ஏற்பட்டால் செயற்கைமுறைக் குடும்பக்கட்டுப்பாடு எதற்கு?

# பஸ் வேலைநிறுத்தம் ஒரு கண்ணேட்டம்

வடபகுதியில் கடந்த ஐந்து நாட்களாக நடந்த பஸ் ஊழியர் வேலை நிறுத்தத்தின் பின் நேற்றுக்காலை சிவப்புநிற பஸ் வண்டிகள் ஓடுவதைக்கண்ட பொதுமகாஜனங்கள் ஒரு பெரிய பெமூச்சுவிட்டு 'அம்மாளே, தெய்வமே' என்றுவணக்கம் செலுத்தியிருப்பார்கள் என்பது நிச்சயம்.

இந்த ஐந்து நாட்களும் இ. போ. ச. வுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைவிட பொதுமக்களுக்கு எத்தனை விதமான நஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை கணக்கிடவும் அளவிடமும் முடியாது.

யாழ். நகரிலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்தில் வசிக்கும் ஒரு முதிய குடும்பம். கணவனும் மனைவியும் தவிர வேறுயாருமில்லை. எழுபது வயதுக்கு மேற்பட்ட இவ்விருவருக்கும் ஒருவருக்கொருவர் துணையாகஜீவியம் நடாத்தினுர்கள். வேறு உறவினர்கள் கிடையாது. பஸ் வேலைநிறுத்தம் துவங்குவதற்கு முன்பு மனைவிக்கு சுகயீனம் கண்டு அவரை பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதித்தார் கணவர்.

அடுத்தநாள் பஸ் ஓடவில்லை. மனைவிக்கு மத்தியான சாப்பாடு கொண்டு போகவேண்டிய மனிதர் தடதடத்துப்போனுர். எப்படியும் போகவேண்டுமல்லவா? கார் ஒன்றை அமர்த்திப்போனுர். ஒவ்வொருநாளும் கார்பிடித்துப்போக பொருளாதாரம் இடமகொடுக்கவில்லை. அடுத்தநாள் ஒருவரைக் கெஞ்சி மன்றுடி சைக்கிள் ஒன்றைவாடகைக்கு எடுத்து அவருக்குப்பின்னுல் உட்கார்ந்து ஆஸ்பத்திரிபோய்ச் சேர்ந்தார். மூன்றும்நாள் அந்த வாய்ப்பும் கிடைக்காமல் போய்விட்டது. பதினெரு மணிவரை காத்திருந்துவிட்டு. கால்நடையாகவே கொதிக்கும்வெய்யிலில் புறப்பட்டுவிட்டார். நான்காம்நாள் 'தெய்வம் தான் துணை' என்று நினைத்துக்கொண்டு அவர் ஆஸ்பத்திரிக்கே போகவில்லை.

வட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து கொடிகாமம் சென்று வியாபாரம் செய்யும் வியாபாரி, சாதாரண நாட்களில் அதிகாலை நாலரை மணி பஸ்ஸில் ஏறி யாழ்ப்பாணம்வந்து தமது சரக்கு பொருட்களுடன் கொடிகாமத்துக்கு பஸ்ஸில் போவார். ஒரு நாளைக்கு போக்குவரத்துச் செலவு சுமார இரண்டு ரூபாய்க்குள் முடிந்துவிடும். பஸ் வேலை நிறுத்தம் வந்தது. எபபடி போய் சேருவது என்று முளித்தனர். ஒருநாளைக்கு போகாமல் விட்டுவிட்டால் வாடிக்கை பறிமுதலாகிவிடும். எனவே கடந்த நான்கு நாட்களும் இருபது ரூபாய்க்கு கார் ஒன்றை அமர்த்தி போய்க்கொண்டு வந்தார். அவருக்கு நட்டம் தான், என்னசெய்வது?

வேலைநிறுத்தத்தை சம்பூர்ணமாக பயன்படுத்தி, லாபம் அடித்து, அது நின்றதும் மனவருத்தப்படுகிறவர்கள் சில வான் ஓடுபவர்கள் தான். வாடகைக்கார் விடுபவர்களும் டாக்ஸிக்காரரும் வழமையான கட்டணங்களையே வாங்கினுர்கள். வான்காரர் சிலரோ நூற்றுக்கு இரண்டு மூன்று மடங்கு அதிகமாக வசூலித்தார்கள். அந்த அந்த வசூலிப்புக்கு கேள்வி முறை கிடையாது. தாங்கள் நினைத்ததைக் கேட்டார்கள். அத்தியாவசியமாக பிரயாணம் செய்ய வேண்டியவர்களும் அவர்கள் கேட்டதைக் கொடுத்துவிட்டு போனுர்கள்.

பஸ்சேவை, ரயில்சேவை, தபால் தந்திசேவை, துறைமுக சேவை முதலியன ஒரு நாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமான சேவைகள். இவற்றில் ஏதாவதொன்று ஸ்தம்பித்துவிட்டால் பொதுமக்கள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. மேற்படிசேவைகளில் உள்ளவர்களும் அவர்களுடைய உறவினர்களும் கூட பொதுமக்கள் தானே?

—சுப்புடு

தேர்தலில் ...

பேராசிரியரின் வாழ்வுகூட இந்தவிதிக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. பேராசிரியரின் துணைவியாராக வந்தமைந்துள்ள அம்மையார் 'நல்ல மனைவி' என்ற இலக்கணத்திற்கு ஒரு உதாரணமாகவே எல்லாராலும் கருதப்படுகிருர். இன்றைய நிலையில் இந்த நல்லமனைவியின் 'ஆலோசனையும் அறிவுரையும்' பேராசிரியருக்குப் பெருநன்மையளிக்கும் என்பதில் ஐயமில்லை.

பொதுத தேர்தலில் தான் செல்வநாயகத்துடன் போட்டியிடும்போது செல்வநாயகம் தனது கட்டுப்பணத்தை இழப்பாரென்றும் பேராசிரியர் சொல்லியிருக்கிருர். இது செல்வநாயகத்தையும் பேராசிரியரையும் பொறுத்த விஷயமல்ல; யாழ்ப்பாணத் தமிழ் மக்களைப் பொறுத்தவிஷயம் முடிவைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## தேர்தலின்போது

தேர்தல்வரும்போது தமிழ் மக்கள்முன் மூன்று முக்கிய கொள்கைகள் முன்வைக்கப் படும். 1. தனிநாடு 2. சமஷ்டி நாடு. 3. ஒரே நாட்டில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சம உரிமை.

தனிப்பட்ட முறையில் பார்க்கும்போது, இதுவரை சிங்கள அரசாங்கங்கள் எவ்வளவோ பாரபட்சமாக நடந்துவந்துள்ள போதிலும் இன்றைய நிலையில் தனிநாடு கோரிக்கை அவ்வளவு தூரம் அரசியல் சாதுரியமான கோரிக்கையாக எமக்குத் தென்படவில்லை. அரசாங்கங்கள் எடுத்து வந்துள்ள பாரபட்சமான நடவடிக்கைகளின் உச்சக் கட்டம்போல் அண்மையில் ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுவதாக வாக்களிக்கப்பட்ட ... களைப் பிற மாநிலங்களோடு இணைக்கும் ரயில் சேவைத் தொடர்பு கேவலமான நிலையிலே தொடர்ந்து இருக்கிறது.

## பல்கலைக் கழகங்கள்

கிழக்கில் ஒன்றும் வடக்கில் ஒன்றுமாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே வாழுகின்ற தமிழ்பேசும்மக்களுக்கு இரண்டு பல்கலைக் கழகங்கள் தேவை. ஆனுல் கண்டியில் ஓர் சிறந்த பல்கலைக் கழகமும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மூன்று பல்கலைக்கழகங்களும் நமக்குள்ள போதும் இது மறுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக் கழகங்களில் ஒன்றில் இன்று குறைநிலையில் கிடக்கும் ஒரே தமிழ்ப்பகுதியும் நிறுத்தப்படப் போவதாக பயமுறுத்தப் பட்டுள்ளமை தமிழர்களதும் தமிழ்பேசும் முஸ்லிம்களதும் புத்தி ஜீவமான வாழ்க்கையை ஆண்மையிழந்ததாய் ஊனமடையச் செய்யும் திட்டமிட்டதோர் முயற்சியாகும், கலாச்சாரப் பூண்டறுப்புக்கு எத்தனிக்கும் தீய முயற்சியாகும்.

காலடி எடுத்து வைத்துவிட்ட மனிதனின் மனம் மாறியேதீரும். அப்பொழுது ...

## பருத்தித்துறை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டில் வந்து சுடும்படி கூறினேன், வாடா பார்ப்பம், வீட்டுக்குவந்தால் சுடுவேன் என்று 2-ம் எதிரி கூறினுர். ரேட்டுக்கு வாறேன் சுடு பார்ப்பம் என்றேன். நான் ரேட்டுக்குப் போனேன். 2 ம் எதிரி துவக்கை எடுத்துக்கொண்டு வந்தார். 1;ம் எதிரியும், அவரது சகோதரரும் ரேட்டுக்கு வந்து என்னை அடித்தார்கள். நானும் அவர்களை அடித்தேன். 1-ம் எதிரி, 2-ம் எதிரியிடமிருந்து துவக்கை வாங்கி எனக்கு குறி பார்த்துச் சுட்டார். நான் ஒரு பக்கத்திற்கு பாயவெடி தீர்ந்தது நான் முன்னுக்குப் போய் துவக்கை பிடித்தேன். 2-ம் எதிரியும் சகோதரடும் வந்து அடித்தார்கள். நான் துவக்கு பிடியை விட்டுவிட்டேன்.

அசைஸ் விசாரணை இன்று காலைவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

## நல்லூர் கி. ச. உபதலைவர்

யாழ்ப்பாணம், வியாழன் நல்லூர் கிராமசபையின் புதிய உபதலைவராக திரு இரத்தினம் சிதம்பரநாதன் ஏகமனதாக தெரியப்பட்டார் (கா நி)

## 700 ரூபா பிணை

வல்வெட்டித்துறை, வியா. புலோலியைச் சேர்ந்த கதிர்காமலிங்கம் வேலுப்பிள்ளை என்ற இளைஞன் புலோலி கிராமக் கோர்ட்டு சந்தியில் நின்று குழப்பம் விளைவித்ததாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூபா 700 பிணையில் செல்லுமாறும் மீண்டும் இம் மாதம் 25-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார.

யில்லை ஐயன் ஐயாறனுர்க்கே'' என்று அப்பர் அடிகள் பாடியுள்ளார். சொல்லும் அதன் கருத்தும் எவ்விதம் இணைபிரியாததோ அதுபோல சிவமும், சக்தியும் ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு'' என்று திருவள்ளுவப் பெருந்தகையும் முதல் குறளில் கூறி, பெண்மையின் பெருமையை அறிவுறுத்தியுள்ளார்பாழேமடக் கொடி யில்லா மனை' என்று ஒளவைமூதாட்டி கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

★

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு குட்டிக்கதை படித்தேன். ஒருவர் எழுதுகிருர், ''என் மனைவிதான் எங்கள் குடும்பத்தில் நிதிமந்திரி. கல்யாணம் ஆனமுதல் அப்படித்தான். காலையில் வாசலில் மணி அடித்தது. காய்கறிக்காரி வந்தாள். கீரைக்கட்டு பத்துக் காசு என்று தெரிந்து சொன்னேன். ''நானும் அப்படித்தான் நினைக்கின்றேன். என்றுலும் அந்த இடத்தில் பிசுவி பேரம்பேச முடியுமா? ஆனுல் டிசைன் நன்ருக இருக்கிறதல்லவ ?'' என்று பதில் கிடைத்தது. என்ன செய்வது?

என் நிதிமந்திரியை விலக்கவோ, ராஜினுமாச் செய்யும்படி கேட்கவோ முடியவில்லையே'' என்று கூறிக் கதையை முடிக்கிருர்! இந்திராகாந்தி. தமது நிதிமந்திரி மொரார்ஜி தேசாயை விலக்கிவிட்டதை இக்குட்டிக்கதை குத்திக்காட்டுகின்றது.

★

எரியலால் வுருவமில்லை ஏறலால் ஏறலில்லை; கரியலால் போர்வையில்லை காண்டருசோதியார்க்குப், பிரிவிலா அமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்தும், அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனுர்க்கே.

—அப்பர் அடிகள்

சியவச கண்காட்சியில் தமிழ்படும் பாடு

# தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு ஆற்றும் சேவை இதுதானு?

சியவஸ கண்காட்சியில் தமிழ் புறக்கணிப்பா?

கல்வி மந்திரியின் சியவஸ கல்வி நூற்றுண்டு கண்காட்சியைக் கண்டு கண்குளிரலாமென தமிழ் மகனெருவன் தப்பித் தவறி கண்காட்சியினுள் நுழைந்தால், அவனது தன்மானத்துக்குச் சவால் விட்டுப் பூதாகாரியமாய் வெடிக்கும் கேள்வி இதுதான்.

கண்காட்சிப் பிரிவின் பல்வேறு பகுதிகளிலும் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் பெயர்ப்பலகைகளில் அநேகமாகத் தமிழையே காணேம்.

ஒன்றிரண்டு பகுதிகளில் மட்டும் பெயர்ப்பலகைகளில் தமிழைப் படாத பாடு படுத்தியிருப்பதைப் பார்த்தால் இதைவிட முற்றுகவே தமிழுக்கு இடமளிக்காமல் விட்டிருப்பின் அதையே கல்வி நூற்றுண்டின் போது தமிழுக்கு செய்த மகத்தான சேவையாகக் கருதியிருக்கலாம்.

முளைத்ததே மூன்று மயிர் அதுவும் எல்லாம் புழுவெட்டு என்றது போல் தகத்தகாயத் தமிழ் தகர்த்துச் சிதைக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டிருந்தது அப் பலகைகளிலே.

ஸ்பார்ட்டக்கஸ் தலைமையில் புரட்சி செய்த அடிமைகள் சிலுவைகளில் அறையப்பட்டு ரோமுக்குச் செல்லும் சாலைகளின் இருமருங்குகளிலும் நாட்டிவைக்கப்பட்டார்களாம், மற்றவர்களுக்குப் புத்தி வரும்படியாக.

சியவஸ கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெயர்ப் பலகைகளைப் பார்க்கும் போது தமிழ்த்தாய் ராக்ஷஸ சிலுவையொன்றில் அறையப்பட்டு குருதி கொட்டும் பயங்கரச் சித்திரம்தான் தமிழ் மகனின் கண்முன்னுல் தோன்ற முடியும். இதுதான் சியவஸ கண்காட்சியா?

தமிழ் கல்வி யதிகாரிகள் தமிழ் உத்தியோகத்தர்கள் தமிழாசிரியர்கள், தமிழ் மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடும் நடக்கும் கண்காட்சிதான் இது என்பதற்கு எந்தவொரு அறிகுறியையும் காணேம். நோக்குமிடமெங்கணும் நீககமற நோக்கியும் தமிழாசிரியர்களோ, தமிழ் மாணவர்களோ ஒருவரேனும் அடியேன் கண்களுக்குத் தட்டுப்படவில்லை.

நான்கண்ட கண்ணராவிகளைக் கண்டு மனம் புளுங்குவதற்கு அவர்கள் அங்கு இல்லாதமை அவர்கள் செய்த பாக்கியம் போலும்.

''தேசிய அரசாங்கத்'' தின் கீழ் அதுவும் ''எழுத்தறிவிக்கும்'' ஏகத்தனி இலாகாவான கல்வியமைச்சின் ஏற்பாட்டினுல் கொண்டாடப்படும் கல்வி நூற்றுண்டு விழாவில் கல்விக் கண்காட்சியில் தமிழைப் படுத்தியுள்ள பாடு இதுதான் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு ஈரியக்கொல்லையாரின் கல்வியமைச்சுஆற்றும்சேவையா?

இந்த நிலை நீடித்தால்?

''மெல்லத் தமிழினிச் சாகும்'' என்று எவனே இடித்துரைத்த வார்த்தைகள் ஞாபகத்துக்கு வரவே குமுறும் நெஞ்சத்தோடு அங்கிருந்தகன்றேன் நான்.

கிருபைராஜா
191, செட்டியார் தெரு,
கொழும்பு, 11

ஆசிரியருக்குக் கடிதம்

மருத்துவ தாதிகளுக்கு

# வாரம் ஒரு நாள் சிங்கள வகுப்பு

யாழ்ப்பாணம், வியாழன் மருத்துவத்தாதிகளும் மருந்துகலவையாளர்களும், சிங்களம் கற்பதற்கு வசதியாக ஒவ்வொரு வைத்திய அதிகாரி பிரிவிலும் வாரத்தில் ஒரு நாள் சிங்கள வகுப்பை நடத்த ஒழுங்கு செய்யப்படும்.

தன்னைச் சந்தித்த தேசிய அரசாங்க சுகாதாரத் தொழிலாளர் சங்க மருத்துவத் தாதிகளுக்கு சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இவ் வாறு தெரிவித்தார்.

ஏழு அம்சக்கோரிக்கையை மையமாக வைத்து அமைச்சருடனும், சுகாதார அமைச்சு அதிகாரிகளுடனும் மேற்படி சங்க ஊழியர்கள் இப்பேச்சுவார்த்தையை நடத்தினுர்கள். இங்கு தெரிவிக்கப்பட்ட சில முடிவுகளின் விபரம் பின் வருமாறு:-

சுகாதார சேவையிலுள்ள சகல சிறு சேவையாளர்களுக்கும் நாளொன்றுச்கு 8 மணி நேர வேலைகொடுப்பது பற்றி அது சம்பந்தமான கமிஷன் வந்ததும் ஆராயப்படும்.

பென்ஷன் சகாய உரிமைக்கு மாற்றப்பட்ட சகலசிறு சேவையாளர்களிட மிருந்து வெட்டப்பட்ட சேமலாப நிதியை உடனடியாக வழங்க அது பற்றிய முழுப் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பது.

காவல் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் 'காக்கிக்' கோட்டுடன் வெள்ளைச்சாரமும் வழங்குவது.

முதல் நியமனம் பெறும் மருத்துவத் தாதிகளை ஒரு வருடகாலம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றவிடுவது.

வார்ட்பணியாளர்களிடமிருந்து 'இன்வென்றிப்' பொறுப்பை நீக்குமாறும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் இங்கு பரிசீலனை செய்யப்படவில்லை.

உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் திருவாளர்கள் மா. ஐயன்னு, வ சுப்பிரமணியம், பி. தேவராசா, பி சந்தியாப்பிள்ளை, செல்வி தோமஸ் ஆகியோர் உட்பட பலஊழியர்கள் சமுகம் கொடுத்திருந்தனர். (கா. நி.)

## சிவபதமடைந்தார்

கதிரன் சின்னப்பொடி

எள்ளங்குளம் நாச்சிமார் கோயில் பரிபாலகரும், மனேச்சருமான கதிரன் சின்னப்பொடி (வாரிச்சாமி) சிவபதமடைந்து விட்டார். பூதவுடல் இன்று 7-8-69 மேற்படிஆலயத்தில் சமாதி செய்யப்படும். ப. சுந்தரம், கரணவாய் வடக்கு வல்வெட்டித்துறை. 1066

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org